


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524
















29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN
# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரம் இருமுறை இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

உதயம் 1591 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 2, 2026

## ரொறன்ரோ சர்வதேச தமிழ் திரைப்பட விழா 2026 இன் விருதுகள் வழங்கும் வைபவத்தில் கௌரவிக்கப்பெற்ற தமிழ்க் கனடிய கலையுலக செயற்பாட்டாளர் வைரமுத்து சொர்ணலிங்கம்

கடந்த 25ம் திகதி வெள்ளிக்கிழமை மார்க்கம் நகரில் யோர்க் சினிமா அரங்கில் நடைபெற்ற ரொறன்ரோ சர்வதேச தமிழ் திரைப்பட விழா-2026 இன் அங்குரார்ப்பண வைபத்தைத் தொடர்ந்து 26ம் திகதி சனிக்கிழமை மற்றும் 27ம் திகதி ஞாயிற்று-க்கிழமை ஆகிய இரு நாட்களும் பல மொழித் திரைப்படங்கள் அங்கு திரையிடப்பெற்று முடிந்த பின்னர் 27ம் திகதி மாலை ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் விருதுகள் வழங்கும் வைபவம் ஸ்காபுறோவில் உள்ள "கிரான்ட் சினமன் கொன்வென்சன்" மண்டபத்தில் நடைபெற்றது.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)



## நாளை 03 – 10 – 2026 அன்று சனிக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள "நெஞ்சம் மறப்பதில்லை" இசை நிகழ்ச்சிக்காக தமிழக பாடக பாடகிகள் ரொறன்ரோ வந்துள்ளனர்



ஸ்காபுறோவில் இயங்கிவரும் விஜயா நகை மாளிகையின் பிரதான அனுசரணையிலும் சமூகச் செயற்பாட்டாளர் குரு யோகராஜாவின் ஏற்பாட்டிலும் எதிர்வரும் 03-10-2026 அன்று சனிக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள "நெஞ்சம் மறப்பதில்லை" இனிய இசை நிகழ்ச்சிக்காக எதிர்பார்க்கப்பட்ட தமிழக பாடக பாடகிகளும் வாத்திய இசைக் கலைஞர்களும் ரொறன்ரோ வந்துள்ளனர். அவர்கள் அனைவரையும் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வரவேற்பதற்காக பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பிரதிநிதிகள் என பத்துக்கு மேற்பட்டவர்கள் விமான நிலையத்தில் கூடியிருந்தனர்.

அனுமதிச் சீட்டுகளுக்கு: 416 564 9642 அல்லது 416 566 0790 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)









ஸ்காபரோவுக்கும் ஒன்ராறியோவிற்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்

# ஸ்காபரோவின் முதல் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டு செயற்படத் தொடங்கியுள்ளது.

**வரலாற்றில் முதன்முறையாக ஸ்காபரோவின் முதல் மருத்துவக் கல்லூரியான ஸ்காபரோ மருத்துவ மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார கல்லூரி (Scarborough Academy of Medicine and Integrated Health SAMIH), உள்ளூர்ச் சமூகத்துக்கான உடல்நலம், கல்வி, நல்வாய்ப்பு ஆகியவற்றை வழங்குகின்ற ஒரு சிறந்த இடமாகத் தடம் பதித்துள்ளது**

உள்ளூர் திறமைகளில் முதலீடு

## ஸ்காபரோவில் உருவாகும் சுகாதார சேவை இங்கிருந்தே தொடங்குகிறது

எங்கள் சமூகத்தை உலகத் தரம் வாய்ந்த சுகாதார சேவையுடன் இணைப்பதே எங்கள் முன்னுரிமையாகும். அடுத்த தலைமுறை சுகாதார சேவை வழங்குநர்களை அவர்கள் வாழும் இடத்திலேயே பயிற்றுவிப்பதன் மூலம், ஸ்காபரோவை நன்கு அறிந்தவர்களே ஸ்காபரோ மக்களுக்கு சேவையாற்றும் வாய்ப்பு உருவாகிறது.

2026 இருக்கை ஒதுக்கீடு

95% ஒன்ராறியோ | 5%

- 95%ஒன்ராறியோ குடியிருப்பாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது
- 5% கனடா முழுவதும் உள்ள மாணவர்களுக்கு திறந்ததாக இருக்கும்

இதன் மூலம், ஒன்ராறியோ மாணவர்களுக்கும், குறிப்பாக ஸ்காபரோ இளைஞர்களுக்கும், மருத்துவத் துறையில் முன்னேறுவதற்கான பாதை மேலும் வலுப்படுத்தப்படுகிறது.

### கைகூடும் கனவு

இது ஒரு கட்டிடம் மட்டுமல்ல; ஸ்காபரோவின் சுகாதார எதிர்காலத்திற்கான வாக்குறுதி. மருத்துவ சேவைகளை வலுப்படுத்தும் SAMIH, நீங்கள் எங்கு வளர்ந்தாலும் உயரங்களை அடையலாம் என்பதை நிரூபிக்கிறது.

ஆண்டுதோறும் பட்டம் பெறுவோர்

## எமது எதிர்கால சுகாதாரப் பணியாளர்களை உருவாக்குதல்

**40** மருத்துவர்கள்

**56** மருத்துவ உதவியாளர்கள்

**30** செவிலியர் பயிற்சியாளர்கள்

**40** உடல்நல சிகிச்சை வல்லுநர்கள்

**300** சுகாதார அறிவியல் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டம் பெறுவார்கள்

"ஸ்காபரோவில் வளர்ந்த பல இளைஞர்களுக்கு, மருத்துவராக வேண்டும் என்ற கனவு இனி வீட்டை விட்டு தொலைவில் செல்ல வேண்டிய ஒன்றாக இருக்காது."

– விஜய் தணிகாசலம், ஸ்காபரோ–ரூஜ் பார்க் சட்டமன்ற உறுப்பினர்

### உங்களுக்குத் தெரியுமா?

1843-ஆம் ஆண்டுக்குப் பின்னர், ரொறன்ரோவில் திறக்கப்படும் முதலாவது புதிய மருத்துவக் கல்லூரி இதுவாகும்.



## Vijay Thanigasalam

MPP for Scarborough - Rouge Park

vijay.thanigasalam@pc.ola.org

416-283-8448

8130 Sheppard Ave East, Unit 105
Scarborough, ON M1B 3W3

www.vijaythanigasalam.ca

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608

4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2

website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# தேசத்தின் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் "அரசியல்" செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா?

ஒரு தேசத்தில் இயற்கையாகவோ அன்றி படைப்பாகவோ குவிந்து கிடக்கும் கடல் வளம் மற்றும் கனிம வளம் ஆகியவை அந்தந்த தேசத்தின் அரசுக்கும் மக்களுக்குமே சொந்தமானவை. ஆனால் இவை பற்றி எதுவும் அக்கறை கொள்ளாத பொதுமக்களில் பெரும்பகுதியினர் வாழ்க்கையில் கஸ்டங்களை அனுபவித்தாலும் இவ்வாறான கனிமக் கொள்ளை அல்லது கடல்வளத்தை சூறையாடுவது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவது இல்லை.

அதற்கு மேலாக, இயற்கையின் கொடையாகவும் அதன் படைப்பாகவும் விளங்கும் மீன்கள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள் ஆகிய கடல்வளம் மற்றும் தங்கம், வெள்ளி, உருக்கு, நிலக்கரி வேறு உலோகங்கள் தயாரிக்கக் கூடிய இன்னோரென்ன கனிமங்கள் உலகின் பல நாடுகளிலும் நிறைந்து கிடக்கின்றன.இவ்வாறு தான் கடல் வளமும். ஏழை மீனவர்கள் கடலுக்குச் சென்று தங்கள் உயிர்களை பணயம் வைத்து மீன்களை பிடித்து வர "எம்மூரின்" சம்மாட்டிகள் எனப்படும் "முதலாளிகள்" அவற்றின் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொண்டு செல்வந்தர்களாக உயர்ந்து சமூக அந்தஸ்த்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

குறிப்பாக தென்னாபிரிக்கா. நைஜீரியா மற்றும் தென்அமெரிக்க நாடுகள் ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றில் தாராளமாக கனிம வளங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் இவை பற்றி அந்தந்த நாடுகளில் வாழும் சாதாரண மக்களோ அன்றி ஆர்வம் குறைந்தவர்களோ கவலைப்படுவதில்லை. இதனால் அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் கனிம வளங்கள் தொடர்பாகவோ அன்றி சட்டங்கள் தொடர்பாகவோ நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் பல விலையுயர்ந்த கனிம வளங்களைக் தம்மகத்தே கொண்டிருந்தாலும் அவைபற்றிய வர்த்தக வாய்ப்புக்கள் பற்றிய ஆர்வம் கொண்டட பிறநாட்டு செல்வந்தர்கள் அல்லது பல்தேசிய நிறுவனங்கள் அந்த நாடுகளின் அரசியல்வாதிகளையும் அரசாங்க அதிகாரிகளையும் அமைச்சர்களையும் ஏதோ வகையில் தொடர்பு கொண்டு நெருக்கமான உறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் செய்து அந்தந்த நாடுகளில் உள்ள கனிம வளங்களை அகழ்ந்து எடுக்கும் பாரிய திட்டங்களை தங்கள் கைகளுக்குள் எடுத்து அந்த நாட்டின் சாதாரண மக்களுக்கும் கிடைக்க வேண்டிய சலுகைகள் அல்லது பயன் ஆகியவற்றை மறைத்து பிறநாட்டவர்கள் அதன் அதிக பலன்களை அனுபவிக்கின்றார்கள். ஆனால் அந்தந்த நாடுகளின் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இதனால் கிடைக்கும் பெரும் நிதியைக் கொண்டு தங்களை செல்வந்தர்களாக உயர்த்திக் கொள்கின்றார்கள். இவ்வாறு ஒரு நாட்டில் நூறு பேர் இந்த மோசடிகளுக்கு பக்கத்துணையாக இருந்து சமூகத்தில் பணபலம் உள்ளவர்களாக உயரத்தை எட்டுகின்றார்கள். ஆனால் அந்த நாட்டின் ஏழை அல்லது நடுத்தர வகுப்பு மக்கள் தொடர்ந்து ஏழைகளாகவே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

இவ்வாறு அந்தந்த நாடுகளில் உள்ள சாதாரண மக்கள் வாழ்க்கையின் அடிமட்டத்திலேயே எவ்வித வசதியும் இன்றி கஸ்டங்களை அனுபவிக்க, மறுபக்கத்தில் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இவ்வாறாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்து தங்கள் அரசியல் பலத்தையும் அதிகார பலத்தையும் பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இதன் காரணமாகவே இம் மாதத்தின் எமது தேசக்குரலில் நாம் இந்த மறைந்து கிடக்கும் கிடக்கும் சட்ட விரோத செயல்களையும் ஊழல் விடயங்களையும் பற்றி எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். இதனாலேயே வடக்கினதும் கிழக்கினதும் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா? என்ற கேள்வியை முன்வைக்கின்றோம்.

நாம் அறிந்த வகையில் இலங்கையிலும் கனிமக் கொள்கை மற்றும் சுரங்க அகழ்வு உரிமங்கள் தொடர்பாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பான சட்ட திட்டங்கள் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ன.

முன்னைய மகிந்தாவின் ஆட்சிக் காலத்திலும் பின்னர் கோட்டாபாய ஆட்சியின் காலத்திலும் மற்றுமொரு ஊழல்வாதி நாமல் ராஜபக்ச வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகளை இலங்கைக்கு அழைத்து அதிகளவு நிதியை அவர்களிடமிருந்து பெற்று கோடிக்கணக்கான டாலர்களை சுருட்டிக் கொண்டார் என்பதும் தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள்.

இலங்கையில் கனிம ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள், குறிப்பாக புதுப்பிக்க முடியாத கனிம வளங்களை அகழ்ந்தெடுப்பதன் மூலம் ஏற்படும் மீட்டெடுக்க முடியாத சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் அச்சம் மற்றும் எதிர்ப்புகளை சுட்டிக்காட்டிவரும் பல சமூக ஆர்வலர்களும் அமைப்புக்களும் உள்ள நிலையில் அவர்களை தங்கள் அதிகார பலத்தைப் பாவித்து அடக்கியும் சிறையில் அடைத்தும் அல்லது கொலைப் பயமுறுத்தல் செய்தும் ஊழல்வாதிகள் தங்கள் "திருட்டுக்களை" தொடர்ந்து வருகின்றார்கள்.

சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட நீண்ட காலத்திற்குப் பின்னரும் நிலச்சரிவுகள், விவசாய உற்பத்தித் திறன் இழப்பு, நீர் வளங்கள் வற்றிப்போதல், சுற்றுச்சூழல் அமைப்புகளின் அழிவு மற்றும் பல்வேறு சூழலியல் பாதிப்புகள் போன்ற நீண்டகால விளைவுகளை பாதிக்கப்பட்ட சமூகங்களே சுமக்க வேண்டியு நிலை சாதாரண மக்களுக்கே ஏற்படுகின்றன. பாதுகாப்பான இடங்களில் தங்கள் மாளிகைகளைக் கட்டி வாழும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இயற்கை அனர்த்தங்களால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.இந்தியாவில் சென்னை போன்ற நகரங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். எந்த ஒரு அரசியல்வாதியும் வெள்ளப்பெருக்கால் சிரமங்களை சந்திப்பதில்லை. ஆனால் மக்களைச் சந்திக்க விலை உயர்ந்த வாகனங்களில் அல்லது வானூர்திகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வருவார்கள்.

அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்த கனிம வளக்கொள்ளைகளை தடுக்கும் கனிமக் கொள்கை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நீண்ட உரையாற்றியுள்ளார். அத்துடன் அவர்கள் இந்த விடயம் தொடர்பான அமைச்சரிடம் பல கேள்விகளையும் தொடத்துள்ளார்.

இனிவரும் நாட்களில் நாமும் இந்த விடயம் தொடர்பான விடயங்களில் ஆர்வத்துடன் எமது அவதானிப்பை செலுத்த வேண்டும் என்றும் தேசத்தின் சொத்தை தனி நபர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் "சூறையாடுவதை" தடுக்க போராட வேண்டும் என்றும் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.!

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



Coverall Group Inc.

416.893.3216

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மக்கள் தங்கள் சொந்த நிலம் விடுவிப்புகோரி போராட்டங்களை நடத்துகையில் சீமெந்து கூட்டுத்தாபன 187.56 ஏக்கர் காணி இராணுவத்திடமிருந்து விடுவிப்பு!

- ந.லோகதயாளன்

வலிகாமம். வடக்கில் இருந்து இலங்கைச் சீமெந்து கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 187.56 ஏக்கர் காணி உத்தியோகபூர்வமாக விடுவிப்பதற்கான ஆவணம் பாதுகாப்புப் படைகளின் சிவில் விவகாரங்களுக்கான சிரேஷ்ட அதிகாரி கேணல் நிசங்கவினால் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் 30ம் திகதி புதன்கிழமை அன்று கையளிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் அமையவுள்ள முதலீட்டு வலயத்திற்கு அரச காணி 351.23 ஏக்கர் வழங்குவதற்கு ஜனாதிபதி அங்கீகாரத்துடன் ஒதுக்கப்பட்டு, அதற்கான பணிகள் மாவட்டச் செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு முதலீட்டு வலயத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 351.23 ஏக்கர் காணிப் பரப்பிற்குள், உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்ட 187.56 ஏக்கர் காணியும் உள்ளடங்குகின்றது.



இதேநேரம் மக்கள் தமது வாழ்விடம் மற்றும் வாழ்வாதார இடங்களை விடுவிக்குமாறு கோரி தொடர்ச்சியாகப் போராடிவருகின்றபோதும் மக்களிற்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலமும் விடுவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கையான கூட்டாளியாக இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவளித்தே தீரும்!

## ரில்வின் சில்வாவிடம் ஜெய்சங்கர் உறுதி



***"மேற்படி சந்திப்பு தொடர்பாக கனடா உதயனுக்கு கருத்து தெரிவித்துள்ள பத்திரிகையாளர் ஒருவர்" இந்தியாவை விட சீனாவையே ஆதரிக்கும் போக்கும் தமிழர்கள் மீதான இனவாதப் பார்வையும் கொண்ட ஜேவிபி எவ்வாறு தனது அரசியல் இருப்பை தக்கவைக்கப் போகின்றது என்பதை தமிழர்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என்றார்.***

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தலைமையிலான குழுவினர், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை இன்று வியாழக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

ரில்வின் சில்வா குழுவினருடனான சந்திப்புக்குப் பின்னர், தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அமைச்சர் ஜெய்சங்கர், அவரையும் இலங்கைப் பிரதிநிதிகளையும் சந்தித்ததில் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துள்ளார்.

"நமது இரு நாடுகளுக்கு இடையிலான ஆழமான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து நல்லதொரு கலந்துரையாடல் நடைபெற்றது" என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "நம்பிக்கையான கூட்டாளி என்ற முறையில், இலங்கையின் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் இந்தியா எப்போதும் ஆதரவளிக்கும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க. - ஜே.வி.பி. உறவுகளை வலுப்படுத்துவது, அமைப்பு ரீதியான அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ள வழிவகுப்பது மற்றும் இரு அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் ஆழப்படுத்துவதே ரில்வின் சில்வா குழுவினருடனான இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

ரில்வின் சில்வா தலைமையிலான ஜே.வி.பி. குழுவில் சந்திரிகா அதிகாரி (மத்திய குழு உறுப்பினர்), அபுபக்கர் ஆதம்பாவா (நாடாளுமன்ற உறுப்பினர்), கபிலன் சுந்தரமூர்த்தி (மாவட்டக் குழு உறுப்பினர்) மற்றும் கல்பனா மதுபாஷினி (சர்வதேச விவகார உறுப்பினர்) ஆகியோரும் உள்ளடங்கியுள்ளனர்.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் ரில்வின் சில்வாவின் இரண்டாவது இந்திய விஜயம் இதுவாகும்.

# கிளிநொச்சியில் இலங்கை அமைச்சர் சந்திரசேகரன் பங்கேற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் இரு அணிகளுக்கிடையே மோதல்!



கிளிநொச்சி - பூநகரி, கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 27.09.2026 அன்று நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியின்போது இரு அணிகளின் ரசிகர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த இறுதிப் போட்டியில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார்.

குறித்த போட்டியின்போது இரு அணிகளின் ரசிகர்களுக்கு இடையே ஏற்பட்ட குழப்பநிலை பின்னர் கட்டுக்கடங்காத அளவுக்கு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சம்பவ இடத்தில் இருந்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி இரு தரப்பினரையும் கலைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், மோதல் தீவிரமடைந்த நேரத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் சம்பவ இடத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேறியதாக போட்டியை பார்வையிட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண மட்டத்திலான குறித்த தொடரை உரிய அங்கீகாரம் இல்லாத குழுவிடம் ஒப்படைத்ததன் விளைவாகவே இவ்வாறான குழப்பநிலை ஏற்படுவதற்கு காரணம் என விளையாட்டு ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

போட்டி ஏற்பாடு, பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் தொடர்பிலும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

செந்தாரகை விளையாட்டுக்கழகத் தலைவர் ஜெகதீஸ்வரன் நங்களேஷ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஜெயபுரம் பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி K.M.A. குமரசிங்க, வேரவில் வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்தியர் E.M.A.U. எக்கநாயக, பிரதான அனுசரணையாளர் ஜெகதீஸ்வரன் பராசக்தி, கிளி/கிராஞ்சி அ.த.க. பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் நடராசா ரவிசங்கர், பூநகரி பிரதேச சபை உறுப்பினர் வல்லிபுரம் அற்புதராசா, வலைப்பாடு பங்குத் தந்தை அருட்பணி குமாரசிங்கம் தயதீபன், கிராஞ்சி கிராம அலுவலர் A.B. நோயல், கிராஞ்சி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தாவீது நிர்மல றொபின்சன், மன்னார் உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் அன்ரனி டெவின்சன், பூநகரி உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் இராசரத்தினம் ராஜ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தமிழரை காலணியால் தாக்க முயன்ற சம்பவம் தொடர்பாக மண்டபம் இலங்கை தமிழர் முகாமில் மறுவாழ்வு ஆணையர் நேரில் ஆய்வு



(30-09-2026)

மண்டபம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் இலங்கைத் தமிழர் ஒருவர் மீது காலணி வீசப்பட்டதாக எழுந்த புகார் தொடர்பாக இலங்கை தமிழர் மறுவாழ்வு ஆணையர் சதீஷ் புதன்கிழமை (30) மாலை நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் இலங்கை தமிழர் முகாமில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களை சந்தித்த ஆணையர் சதீஷ், அவர்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இந்தியாவுக்கு அகதிகளாக வந்துள்ளவர்களில் சிலர், மீண்டும் இலங்கைக்குச் செல்ல விருப்பம் தெரிவித்து மனு அளித்தனர்.

மேலும், முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் ஆணையரை நேரில் சந்தித்து ஆதார் வழங்கி அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும் என கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். முகாமில் புதிதாக கட்டப்பட்டு வரும் வீடுகள் மற்றும் நலத்திட்ட பணிகளையும் ஆணையர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வீடுகளில் குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.



ஆய்வின்போது, முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள், ஆதார் அட்டை இல்லாததால் மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதிலும், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதிலும் சிரமம் ஏற்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், நீண்ட காலமாக முகாமில் பதிவில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு சிறப்பு தணிக்கை, விடுமுறை பெறுவதில் விலக்கு அளிக்க வேண்டும், முகாமில் சீரான மின் விநியோகம் செய்ய வேண்டும், மின் பணியாளரை நிரந்தரமாக அமைக்க வேண்டும், நுழைவாயில் இரவு நேரங்களில் கூடுதல் போலீசார் பாதுகாப்பு பணியில் அமர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகளை மனுவாக அளித்தனர்.

இதனிடையே, இலங்கைத் தமிழர் ஒருவர் மீது காலணி வீசப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் தரப்பில் அறிக்கை பெறப்பட்டு, அது தொடர்பாக விசாரணை நடத்தப் பட்டுள்ளதாக ஆணையர் தெரிவித்தார்.

முகாமில் நடைபெற்று வரும் அனைத்து நலத்திட்ட பணிகள் மற்றும் புதிய வீடுகள் கட்டுமான பணிகளை நேரில் ஆய்வு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சட்டவிரோத மீன்பிடிப் படகுகள் மூலம் முன்னெடுக்கப்படும் சட்டவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த 15 கடற்றொழில் மாவட்டங்களில் விசேட குழுக்கள்

கனகராசா சரவணன்

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஏனைய சட்டவிரோதச் செயல்களைத் தடுக்கவும் 15 பிரதான கடற்றொழில் மாவட்டங்களில் விசேட மாவட்ட மட்டக் குழுக்களை அமைப்பது தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் அண்மையில் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) மற்றும் கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோரின் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

ஏற்கனவே, நடைபெற்ற கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக, நாட்டின் கடல் வளங்களைப் பாதுகாப்பதுடன், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த ஆகஸ்ட் மாதம் 15 பிரதான கடற்றொழில் மாவட்டங்களை உள்ளடக்கிய விசேட குழுக்களை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் முன்னேற்றம் மற்றும் குழுக்களைச் செயற்படுத்துவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

இதற்கமைய, கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், சிலாபம், அம்பாறை, முல்லைத்தீவு, புத்தளம், காலி, மாத்தறை, தங்காலை, களுத்துறை மற்றும் மன்னார் ஆகிய 15 மாவட்டங்களை மையப்படுத்தி விசேட குழுக்களை அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இக்குழுக்களில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார், கடற்படையினர், கடலோரப் பாதுகாப்புப் படையினர், சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள், மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தொடர்புடைய தரப்பினரை உள்ளடக்கி, மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதன் மூலம், ஒவ்வொரு மாவட்டத்திலும் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் ஏனைய சட்டவிரோதச் செயல்களைக் கண்டறிந்து, அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்தி, சட்ட அமலாக்க நடவடிக்கைகளை மேலும் பயனுள்ள வகையில் முன்னெடுப்பதற்கும் இக்குழுக்கள் பங்களிக்கும்.

மேலும், இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளை வலுப்படுத்துதல், தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் புதிய சட்ட ஏற்பாடுகளின் அவசியம் குறித்து ஆராய்தல் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்த (ஓய்வு), பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி), சிரேஷ்ட ஒருங்கிணைப்புச் செயலாளர், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்,



இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், கடற்படைத் தளபதி, கடலோரப் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம், பொலிஸ் கடல்சார் மற்றும் சுற்றுலாப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சிரேஷ்ட அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

நாட்டின் கடல் வளங்களைப் பாதுகாத்தல், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் சட்டபூர்வமான கடற்றொழில் நடவடிக்கைகளை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து வலுவான கண்காணிப்பு மற்றும் சட்ட அமலாக்கப் பொறிமுறையை உருவாக்குவதே இவ்விசேட மாவட்ட மட்டக் குழுக்களை அமைப்பதன் பிரதான நோக்கமாகும்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "தியாக தீபம்" திலீபன் சிலை உடைப்பு விவகாரத்தைக் கண்டித்து யாழ்ப்பாண. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கை!

பு. கஜிந்தன்



தமிழ் மக்களின் நினைவுகூரும் உரிமையை கேள்விக்குள்ளாக்கி, தியாகதீபம் திலீபனின் வெண்கலச் சிலையை அகற்றிச் சென்ற இலங்கை அரச பேரினவாத அடக்குமுறைக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கை தற்போது வெளியாகியுள்ளது.

தியாகதீபம் திலீபன் அவர்களின் நினைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது வெண்கலச் சிலையை இலங்கை காவற்துறையினர், 27-09-2026 அன்று காலை 6:30 மணியளவில், அத்துமீறி அகற்றி எடுத்துச் சென்றுள்ள செயலினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக எமது கண்டனங்களைப் பதிவு செய்கின்றோம். இச்செயல், தமிழ் மக்களின் நினைவேந்தல் உள்ளிட்ட கூட்டுரிமைகளின் மீது தொடுக்கப்பட்ட நேரடித் தாக்குதலாகும். இது தொடர்ந்து ஆளும் இலங்கை அரசுகளின் புரையொடிப் போயுள்ள சிங்கள பௌத்த பேரினவாத மனோ நிலையின் மாறாத வடிவமொன்றாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தமிழர் தாயக விடுதலைக்காக அறப்போர் போர் செய்து தன்னுயிர் ஈந்த தியாகதீபம் திலீபன் அவர்களை அமைதி வழியில் நினைவுகூருவது என்பது தமிழர்களின் அடிப்படை உரிமையாகும். அந்த உரிமையைத் தொடர்ச்சியாகப் பறிப்பதும், நினைவுச் சின்னங்களை அகற்றுவதும், சிறிலங்கா அரச பேரினவாதம் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாகத் தனது அடக்குமுறையைக் காட்டி நிற்பதற்கு ஒரு தெளிவான ஆதாரமாக விளங்குகின்றது.

தமிழர்களின் தாயகமெங்கும் கடந்த கால ஆட்சியாளர்களால் தமிழ் மக்களை உளவியல் ரீதியாக ஒடுக்கும் நோக்கோடு பெருமளவான "போர் வெற்றிச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன. பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பின் அடையாளங்களாக அவை இன்றும் தமிழர் தேசத்தில் திணிக்கப்பட்டு ஸ்ரீலங்கா இராணுவத்தால் பராமரிக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்பின் அடையாளங்களாக அந்த வெற்றிச் சின்னங்கள் பாதுகாக்கப்படுகின்ற அதேவேளை, அறப்போர் செய்து தன்னுயிர் ஈந்த ஒருவரை தமிழ் மக்கள் கண்ணீரோடு நினைவுகூருவதற்காக அமைக்கப்பட்ட ஒரு நினைவுச் சிலையை அங்கிருந்து அகற்றிச் செல்வது எத்தகைய நீதி?

இவ்வாறு மீண்டும் மீண்டும் தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டி, அவர்களின் மனங்களை துன்புறுத்துகின்ற இத்தகைய செயற்பாடுகள், பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் கொந்தளிப்பான ஒரு மனநிலையை ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமன்றி, தமிழ் மக்கள் மீதான பேரினவாத சக்திகளின் தொடர்ச்சியான இனவாதப் போக்கிற்கு, அரசு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளித்து வருகின்றது என்பதையே இந்தச் செயற்பாடு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. ஒடுக்கப்படும் மக்களின் மனங்களை மேலும் ரணப்படுத்தும் இத்தகைய சீண்டல்கள், நல்லிணக்க மாயைக்கு பின்னிருந்து மெல்ல வெளித்தெரியும் சிங்கள பௌத்த பேரினவாத மனோநிலையேயன்றி வேறில்லை.

ஸ்ரீலங்கா அரசிற்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் "பயங்கரவாதிகள் எனக் முத்திரை குத்தப்பட்ட ஜே.வி.பியினரின் நினைவுச் சின்னங்களை நிறுவி, நினைவேந்தல்களை தெற்கில் பகிரங்கமாக முன்னெடுப்பதற்கும் சிறிலங்கா அரச இயந்திரங்கள் ஆதரவளித்து வருகின்றன.

தெற்கில் அரசைக் கவிழ்க்க ஆயுதமேந்தியவர்கள் சுதந்திரமாகக் கொண்டாடப்படுவதும், வடக்கில் தமிழர் உரிமைக்காக அமைதி வழியில் உயிரீகம் செய்தவரை நினைவு கூருதல் குற்றமாக்கப்படுவதும் எவ்வகையில் ஜனநாயகம்? இதுதான் சிறீலங்கா அரசு கூறும் "சமத்துவமா?

ஈழத்தமிழர் மனங்களின் பதிந்துவிட்ட தியாக தீபத்தை, அடக்குமுறைகள் மூலம் தமிழர் மனங்களிலிருந்து அகற்றிவிடலாம் என எண்ணும் ஸ்ரீலங்கா அரச இயந்திரத்திற்கு ஒன்றை தெளிவாகச் சொல்கிறோம் "உங்களால் சிலைகளை மட்டும் தான் அகற்ற முடியுமேயன்றி, தமிழர் தேசக் கனவையல்ல!

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் இந்தத் தொடர்ச்சியான ஸ்ரீலங்கா அரச அடக்குமுறைக்கு எதிராக அனைத்து ஜனநாயக மற்றும் மனித உரிமைச் சக்திகளும் ஓரணியில் திரண்டு குரல்கொடுக்க வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறைகூவல் விடுக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# நடுவானில் இந்திய விமானியை கத்தியால் குத்தி சக விமானி விமான தகர்ப்பில் ஈடுபட முயன்ற சம்பவம் உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது

உலக செய்திகள்
World News



நடுவானில் இந்திய விமானியை கத்தியால் குத்தி சக விமானி விமான தகர்ப்பில் ஈடுபட முயன்ற அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது. இஸ்ரேல் நாட்டை சேர்ந்த சுற்றுலா பயணிகள் சிலர் துபாயை சுற்றி பார்ப்பதற்காக சென்றனர். அவர்கள் தாயகம் திரும்புவதற்காக எமிரேட்ஸ் ஏர்லைன்சின் பிளைதுபாய் என்ற விமானத்தில் புறப்பட்டனர். இதற்காக, துபாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இஸ்ரேல் நாட்டின் தலைநகர் டெல் அவிவில் உள்ள பென்குரியன் சர்வதேச விமான நிலையம் நோக்கி அந்த போயிங் ரக விமானம் நேற்று காலை புறப்பட்டது. விமானத்தில் 27 குழந்தைகள் உள்பட 174 இஸ்ரேலிய பயணிகள் மற்றும் விமான பணிப்பெண்கள் என மொத்தம் 180-க்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர். இந்தியாவை சேர்ந்த தலைமை கேப்டன் ஸ்மித் மச்சர் மற்றும் அவருக்கு உதவியாக ஓமன் நாட்டை சேர்ந்த துணை விமானி ஒருவருடன் விமானம் புறப்பட்டது. விமானம் புறப்பட்ட இரண்டரை மணி நேரத்தில் சவுதி அரேபியா எல்லையை கடந்து, ஜோர்டான் வான்பரப்பில் 33 ஆயிரம் அடி உயரத்தில் அதிவேகத்தில் பறந்து கொண்டிருந்தது.

அப்போது, விமானிகள் அறையான காக்பிட்டில் யாரும் எதிர்பாராத அந்த பயங்கரம் அரங்கேறியது. ஓமன் நாட்டை சேர்ந்த துணை விமானி, திடீரென தான் ரகசியமாக மறைத்து வைத்திருந்த சிறு கத்தியை எடுத்து, இந்திய கேப்டனான ஸ்மித் மச்சரை நோக்கி வெறியோடு பாய்ந்து கொடூரமாக குத்தினார். ரத்த வெள்ளத்தில் சரிந்த கேப்டனிடமிருந்து விமானத்தின் கட்டுப்பாட்டை பறித்த அந்த கொடூர துணை விமானி, தற்கொலை தாக்குதல் நடத்தி ஒட்டுமொத்த பயணிகளையும் கொல்ல சதி செய்தார். விமானத்தை தரையில் மோதி வெடிக்க செய்யும் திட்டத்துடன், வெறும் 30 விநாடிகளிலேயே 14 ஆயிரம் அடிக்கு செங்குத்தாக கீழ்நோக்கி சரிக்க செய்துள்ளார். ராட்சத ராட்டினத்தில் இருந்து கீழே விழுவதுபோல் விமானம் மரண வேகத்தில் தலைகீழாக சரிந்ததால், உள்ளே இருந்த 170 இஸ்ரேலிய பயணிகளும் மரண பயத்தில் கதறி துடித்தனர். காக்பிட் அறைக்குள் என்ன நடக்கிறது என்று தெரியாமல் விமான பணிப்பெண்களும் அலறினர். காயமடைந்த நிலையிலும் கேப்டன் ஸ்மித் மச்சர், விமானத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர துணை விமானியுடன் கடுமையாக போராடினார். அதே நேரத்தில் விமானத்தில் இருந்து ஆபத்து சிக்னலும் அனுப்பப்பட்டது. அப்போது விமானத்தில் இஸ்ரேல் நாட்டை சேர்ந்த ராணுவ வீரர்கள் மற்றும் சக விமானிகள் உஷாரானார்கள். அப்போது கேப்டன் காக்பிட் கதவை திறக்க, உடனடியாக அவர்கள் உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்தியவரை மடக்கி பிடித்து கயிற்றால் கட்டினர்.

பின்னர் விமானம் சவுதி அரேபியாவின் தபூக் விமான நிலையத்தில் அவசரமாக பத்திரமாக தரையிறக்கப்பட்டது. இதனிடையே, நடுவானில் இருந்து "விமானம் கடத்தப்பட்டு விட்டது" (ஸ்குவாக் 7500) என்ற அபாய சிக்னல் இஸ்ரேல் கட்டுப்பாட்டு அறைக்கு கிடைத்தது. இதனால் எல்லையில் பெரும் பதற்றம் தொற்றிக்கொண்டது. 174 இஸ்ரேலியர்களின் கதி என்ன? என்ற பீதியில், இஸ்ரேல் நாட்டு ராணுவம் உடனடியாக தனது நவீன போர் விமானங்களை நடுவானில் அவசரமாக பறக்கவிட்டு அதிரடி மீட்புப்பணியில் இறக்கியது. ஆனால், அதற்குள் காயமடைந்த இந்திய கேப்டன் மற்றும் விடுப்பில் பயணித்த ராணுவ வீரர்களின் சாதுரியத்தால் விமானம் சவுதி அரேபியாவின் தபூக் விமான நிலையத்தில் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. இதனால் போர் விமானங்கள் திரும்ப பெறப்பட்டன. விமானத்திற்குள் புகுந்த சவுதி அரேபிய பாதுகாப்பு படையினர், கயிற்றால் கட்டப்பட்டிருந்த ஓமன் நாட்டு துணை விமானியை உடனடியாக கைது செய்து இழுத்து சென்றனர். இந்த சம்பவம் குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் உளவு அமைப்பான "மொசாட்" கூட்டாக வெளியிட்ட அறிக்கையில், "இது சாதாரண மோதல் அல்ல் இஸ்ரேலியர்களை குறிவைத்து ஒட்டு மொத்த விமானத்தையும் மோதி அழிக்க நடத்தப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் சதி" என அதிரடியாக அறிவித்துள்ளனர். தபூக் விமான நிலையத்தில் தவித்த பயணிகளையும் தாயகம் அழைத்து வர இஸ்ரேல் மற்றும் சவுதி அரேபியா அரசுகள் கூட்டு ஏற்பாடுகளை செய்துள்ளன. நடுக்கடலில் வானில் அரங்கேறிய இந்த பயங்கரவாத சதி முறியடிப்பு உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# மனைவி மறைந்த மனவேதனையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மலேசிய முன்னாள் பிரதமர் மகாதிர் முகமது

மனைவி மறைந்த மனவேதனையில் மலேசிய முன்னாள் பிரதமர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மலேசியாவில் மிக நீண்டகாலப் பிரதமராகவும், நவீன மலேசியாவின் சிற்பியாகவும் திகழ்ந்தவர் மகாதிர் முகமது. இவருக்கு தற்போது 101 வயதாகும் நிலையில், கடந்த ஆகஸ்ட் மாதம் தான் தனது மனைவி சித்தி ஹாஸ்மாவுடன் 70-வது திருமண நாளை நெகிழ்ச்சியோடு கொண்டாடினார்.

ஆனால், கடந்த திங்கட்கிழமை அவரது மனைவி சித்தி ஹாஸ்மா (100 வயது) திடீரென உயிரிழந்தார். மனைவியின் இறுதிச்சடங்கின்போது, மகாதிர் முகமது கண்ணீர் மல்கக் கதறி அழுதது ஒட்டு மொத்த மலேசியாவையும் உலுக்கியது. இந்நிலையில், மனைவியின் பிரிவைத் தாங்க முடியாமல் கடும் மனவேதனையில் இருந்த அவருக்கு நேற்று திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் கோலாலம்பூரில் உள்ள தேசிய இதய சிகிச்சை மையத்தில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். ஏற்கனவே இதய அறுவை சிகிச்சை செய்துகொண்ட அவருக்கு, மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

# 03-10-2026 அன்று சனிக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள 'நெஞ்சம் மறப்பதில்லை' இசை நிகழ்ச்சிக்காக தமிழக பாடக பாடகிகள் ரொறன்ரோ வந்துள்ளனர்

ஸ்காபுறோவில் இயங்கிவரும் விஜயா நகை மாளிகையின் பிரதான அனுசரணையிலும் சமூகச் செயற்பாட்டாளர் குரு யோகராஜாவின் ஏற்பாட்டிலும் எதிர்வரும் 03-10-2026 அன்று சனிக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள "நெஞ்சம் மறப்பதில்லை" இனிய இசை நிகழ்ச்சிக்காக எதிர்பார்க்கப்பட்ட தமிழக பாடக பாடகிகளும் வாத்திய இசைக் கலைஞர்களும் ரொறன்ரோ வந்துள்ளனர்.ய அவர்கள் அனைவரையும் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வரவேற்பதற்காக பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பிரதிநிதிகள் என பத்துக்கு மேற்பட்டவர்கள் விமான நிலையத்தில் கூடியிருந்தனர்.





பிரபல பாடகர் முகேஷ்-பாடகர் சந்தோஷ் சுப்பிரமணியம்- பாடகி வர்ஷா மற்றும் வாத்திய இசைக் கலைஞர் பிரபல்யமான மணிகண்டன் ஆகியோர் விமான நிலையத்தில் 30ம் திகதி வரவேற்கப்பெற்றார்கள்.



அன்றைய தினம் மாலை ஸ்காபுறோவில் நடைபெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பிலும் மிகுந்த ஆர்வத்துடன் பாடகர் முகேஷ்-பாடகர் சந்தோஷ் சுப்பிரமணியம்- பாடகி வர்ஷா மற்றும் வாத்திய இசைக் கலைஞர் பிரபல்யமான மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு ரசிகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரின் கருத்துக்களுக்கு பதிலளித்தார்கள்.

இங்கே காணப்படும் படங்களின் தமிழக மற்றும் கனடிய பாடக பாடகிகள் மற்றும் இசைக் கலைஞர்கள் அத்துடன் விஜயா நகைமாளிகை உரிமையாளர் ரூபன் ஆகியோரும் ஏனைய நண்பர்களும் காணப்படுகின்றார்கள். அனுமதிச் சீட்டுகளுக்கு: 416 564 9642 அல்லது 416 566 0790 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

# Awards Ceremony & Launching of their Own Cricket Field hosted by 'Tamil Canadian Cricket Association was a Proud Occasion!

## 'தமிழ்க் கனடிய கிரிக்கெட் கழகம்' நடத்திய வருடாந்த விருது விழாவும் புதிய கிரிக்கெட் மைதான திறப்புவிழாவும்!

கனடாவில் நீண்ட கால கிரிக்கெட் வரலாற்றையும் வெற்றிகளையும் கொண்ட "தமிழ்க் கனடிய கிரிக்கெட் கழகம்" நடத்திய 2026ம் ஆண்டிற்குரிய வருடாந்த விருது விழாவும் அவர்களது புதிய கிரிக்கெட் மைதான திறப்பு விழாவும் கடந்த 26ம் திகதி சனிக்கிழமையன்று மாலை நடைபெற்றது.




3280 Westnew Road North, Pickering என்னும் விலாசத்தில் அமைந்துள்ள விசாலமான மைதானத்தில் நடைபெற்ற இந்த அற்புதமான வைபவத்தில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள்-மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள் ஏனைய கிரிக்கெட் கழகங்களின் உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட அந்த மைதானம் அழகிய முறையில் அலங்கரிக்கப்பெற்று பார்ப்பவர்கள் உற்சாகமடையும் ஒரு தமிழர் விழாவாக நடைபெற்றது என்றால் அது மிகையாகாது.







மேற்படி கிரிக்கெட் மைதான அமைந்துள்ள நிலமானது பிக்கரிங் நகர சபைக்குச் சொந்தமானது என்பதும் நீண்ட கால குத்தகைக்கு இந்த நிலம் வழங்கப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் 'Tamil Canadian Cricket Association நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்கள் மற்றும் கழகங்கள் ஆகியவற்றுக்கு கேடயங்களும் வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன. கழகத்தின் தலைவர் திரு சஞ்சேய் கோணேஸ்வரன் இந்த வைபத்தை தனது அயராத முயற்சியினால் நடத்தியும் சொந்தமாக ஒரு கிரிக்கெட் மைதானத்தைப் நாம் எமக்காகப் பெற்றுக் கொண்டோம் என்னும் பெருமைக்குரியவராக அங்கு எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாது காணப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.







- செய்தியும் படங்களும் சத்தியன்









# யாழ்ப்பாணத்தில் அகற்றப்பட்ட திலீபனின் சிலை



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

**நினைவுகளை, நினைவுச் சின்னங்களை, சிலைகளை அழிப்பது ஓர் அரசியல். அது ஒடுக்கும் அரசியல். இனஅழிப்பு அரசியல். அதற்கு எதிராக நினைவு-களைப் புதுப்பிப்பது: நினைவுகளை மறந்துவிடாமல் இருப்பது: நினைவுகளை மையமாக வைத்துத் தேசத்தைத் திரட்டுவது என்பது இன ஒடுக்குமுறைக்கு எதிரான ஓர் அரசியல். இன அழிப்புக்கு எதிரான ஓர் அரசியல். இலங்கைத் தீவின் பல தசாப்த கால அரசியல் எனப்படுவது இந்த இரண்டு முரணான போக்குகளால் கட்டமைக்கப்பட்டதுதான். இந்த வரலாற்று அனுபவத்தின் பின்னணிகள் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை திலீபனின் சிலை அகற்றப்பட்டது தொடர்பான விடயத்தைப் பார்க்கலாம். திலீபனின் சிலை ஒரு விவகாரமாகியது இதுதான் முதல் தடவை அல்ல. இதற்கு முன்னரும் அந்த நினைவுத் தூபி சிதைக்கப்பட்டிருக்கிறது. இம்முறை ஒரு மார்பளவு சிலை வைக்கப்பட்டது.**

சிலைகளை, நினைவுச் சின்னங்களைச் சிதைப்பது, உடைப்பது, அகற்றுவது என்பது சிங்கள பௌத்த அரசியலின் பல தசாப்த கால நடைமுறை. அதற்கு எதிராக சிலைகளைத் திரும்பத்திரும்பக் கட்டுவது நினைவுச் சின்னங்களை திரும்பத்திரும்பக் கட்டுவது என்பது தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் பல தசாப்த கால நடைமுறை.

நினைவுகள் தொடர்ச்சியைக் குறிக்கும். வரலாறு என்பது தொடர்ச்சிதான். நினைவுகளை மையமாக வைத்துத் தமிழ்மக்கள் திரட்சியுறக்கூடாது என்ற அடிப்படையில்தான் சிலைகளும் நினைவுச் சின்னங்களும் அகற்றப்படுகின்றன. அல்லது சிதைக்கப்படுகின்றன.



தமிழ் மக்கள் தங்கள் நினைவுகளை சிலைகளாகவோ சின்னங்களாகவோ அல்லது வேறு வடிவங்களிலோ முன்நிறுத்துவதன் மூலம் முதலாவதாக, தமது நினைவுகளை, அவற்றின் தொடர்ச்சியைப் பாதுகாக்கிறார்கள். இரண்டாவதாக, அதன்மூலம் வரலாற்றை, வரலாற்றுத் தொடர்ச்சியைப் பாதுகாக்கின்றார்கள். மூன்றாவதாக, அதை இன அழிப்புக்கு எதிரான ஒரு போராட்ட வடிவமாக முன்னெடுக்கிறார்கள்.

எனவே நினைவுகளை, நினைவுச் சின்னங்களை, சிலைகளை அழிப்பது ஓர் அரசியல். அது ஒடுக்கும் அரசியல். இனஅழிப்பு அரசியல். அதற்கு எதிராக நினைவுகளைப் புதுப்பிப்பது: நினைவுகளை மறந்துவிடாமல் இருப்பது: நினைவு-களை மையமாக வைத்துத் தேசத்தைத் திரட்டுவது என்பது இன ஒடுக்குமுறைக்கு எதிரான ஓர் அரசியல். இன அழிப்புக்கு எதிரான ஓர் அரசியல். இலங்கைத் தீவின் பல தசாப்த கால அரசியல் எனப்படுவது இந்த இரண்டு முரணான போக்குகளால் கட்டமைக்கப்பட்டதுதான். இந்த வரலாற்று அனுபவத்தின் பின்னணிகள் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை திலீபனின் சிலை அகற்றப்பட்டது தொடர்பான விடயத்தைப் பார்க்கலாம். திலீபனின் சிலை ஒரு விவகாரமாகியது இதுதான் முதல் தடவை அல்ல. இதற்கு முன்னரும் அந்த நினைவுத் தூபி சிதைக்கப்பட்டிருக்கிறது. இம்முறை ஒரு மார்பளவு சிலை வைக்கப்பட்டது. அந்தச் சிலை ஃபைபரில் வார்க்கப்பட்டு வெண்கல நிறம் பூசப்பட்டுள்ளது. அந்தச் சிலை திலீபன-ின் புறவுருவத்தை ஒத்திருக்கிறது. ஆனால் முகத் தசைகள் இறுகிப்போய், திலீபனை மூப்பாகக் காட்டுகின்றன. அது தீலீபனைத் தத்ரூபமாகப் பிரதிபலிக்கவில்லை.

இதேபோன்ற விமர்சனங்கள் காரணமாக கடந்த மாதம் நேபாளத்தில் திறக்கப்படவிருந்த 45 தியாகிகளின் சிலைத் திறப்பு விழா ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நேபாளத்தில் ஏற்பட்ட "ஜென்சி" கிளர்ச்சியின்போது செப்டம்பர் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் கொல்லப்பட்ட 45 தியாகிகளின் நினைவு நாள் இந்த செப்டம்பர் மாதம் அனுஷ்டிக்கப்பட்டது. அதையொட்டி அந்த 45 பேர்களுடைய சிலைகள் திறக்கப்படவிருந்தன. ஆனால் அந்தச் சிலைகள் தமது பிள்ளைகளின் முகங்களை ஒத்திருக்கவில்லை என்று பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவசர அவசரமாகத் திறப்பு விழாவை நோக்கிச் சிலைகளைச் செதுக்கியபடியால் அவை தத்ரூபமாக அமையவில்லை என்று சிற்பிகள் தெரிவிக்கிறார்கள். அதைத்தொடர்ந்து சிலை திறப்பு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திலீபனின் மார்பு வரையிலுமான அந்தச் சிலை அவரை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை என்ற விவகாரத்தைத் தமிழ்மக்கள் தங்களுக்குள் தீர்த்துக் கொள்வார்கள். அது பிரச்சனையில்லை. இங்கு பிரச்சினை என்னவென்றால், திலீபனின் சிலை ஒன்றை வைக்க முடியாது என்று அரசாங்கம் கூறுவதுதான்.

அது சட்டப்படி குற்றம் என்ற பொருள்பட அமைச்சரவைப் பேச்சாளர் கூறுகிறார். சட்டரீதியாகத் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பின் உறுப்பினருடைய சிலை அது என்பதனால், அதனை அங்கே வைத்தது சட்டப்படி குற்றம் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாகத் தெரிகிறது. இது ஏற்கனவே இருந்த அரசாங்கங்களின் நிலைப்பாடுதான்.

அதேசமயம் இந்த விடயத்துக்கும் அரசாங்கத்துக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல அமைச்சர் சந்திரசேகரன் கருத்துக் கூறியுள்ளார். அமைச்சர் சந்திரசேகரன் யார்? வட மாகாண விவகாரங்களைக் கையாள்வதற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அமைச்சர். அவர் கூறுகிறார், சிலை தூக்கப்பட்டதற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் தொடர்பு ஏதும் கிடையாது என்று. இந்த விடயத்தில் யாழ்.மாநகர சபை முடிவெடுத்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் செய்யாத வேலையை போலீசார் செய்தார்கள் என்றும் சந்திரசேகரன் கூறுகிறார்.

அதாவது சந்திரசேகரன் இந்த விடயத்தில் மாநகர சபையையும் அதற்கு எதிராக விமர்சனங்களை முன்வைக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் மோத விட விரும்புகிறார் என்று தெரிகிறது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானத்தை நேரடியாகக் குற்றம் சாட்டியிருக்கிறது. சிவஞானம் அதை மறுத்திருக்கிறார். தற்காலிகமாக அந்தச் சிலையை வைப்பதற்கு அனுமதி கேட்கப்பட்டதாக மாநகர சபை கூறுகிறது. அப்படியென்றால் தற்காலிகமாக வைக்கப்பட்ட சிலையை தேவை முடிந்ததும் அகற்றலாமா? தற்காலிகமாக சிலையை வைப்பதற்கு சட்ட ரீதியாக ஏற்பாடுகள் உண்டா? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் கேட்டதற்காக அந்தச் சிலையை தற்காலிகமாக வைப்பதற்கு மாநகர சபை ஒப்புக்கொண்டது என்றால் தற்காலிகமாக சட்டத்தை மீறுவதற்கு மாநகர சபை தயாராக இருந்ததா?

தமிழரசு கட்சி இந்த விடயத்தில் "ரிஸ்க்" எடுக்கவில்லை என்பது தெரிகிறது. அது விவகாரத்தை சட்டரீதியாக அணுக முயற்சிக்கிறது. ஆனால் இது சட்ட ரீதியான விவகாரம் அல்ல. சட்டப்படி பார்த்தால் திலீபன் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பின் உறுப்பினர். எனவே சட்டரீதியாக அவரை நினைவுகூர அரசாங்கம் அனுமதிக்காது. அதனால் தமிழ்த்தரப்பு அவர் அகிம்சை வழியில் போராடி உயர் நீர்த்தவர் என்ற காரணத்தைக் குவிமயப்படுத்தி அவரை நினைவு கூர்ந்து வருகிறது.

சட்டப்படி பார்த்தால், தற்காலிகமாகக் கூட சிலையை அனுமதித்திருக்க முடியாது. எனவே தமிழரசுக் கட்சி ஒரு கட்டத்துக்கு மேல் சட்ட மறுப்பாகப் போராடத் தயாரில்லை என்பதுதான் மெய்நிலை. போராட்டம் என்பது ஒரு வகையில் சட்ட மறுப்புத்தான். சட்டரீதியாக ஒரு கட்டத்துக்கு மேல் போராட முடியாது.

தமிழரசுக் கட்சி மாநகர சபையின் ஆளுங்கட்சி. இந்த அடிப்படையில் அது ஒரு கட்டத்துக்கு மேல் ரிஸ்க் எடுக்கவில்லை என்பதுதான் உண்மை. இந்த விடயத்தில் போலீசார் திலீபனின் நாட்கள் முடியும்வரை சிலையில் கை வைக்காமல் பொறுத்திருந்திருக்கிறார்கள். நினைவு நாட்களின் மத்தியில் சிலையை அகற்றினால் வரக்கூடிய உணர்ச்சிக் கொந்தளிப்பான விளைவுகளைத் தவிர்ப்பதற்காக அவர்கள் இறுதி நாள் வரை காத்திருந்து, நினைவு நாள் முடிந்ததும் சிலையை அதிகாலையிலேயே அகற்றியிருக்கிறார்கள்.

அதாவது திலீபனின் சிலை வைக்கப்படுவதை அரசாங்கம் அனுமதிக்காது. படத்தை வைத்து அல்லது கட்டவுட்டை வைத்து நினைவு கூர்வதை ஓரளவுக்கு சகித்துக் கொண்டாலும் நிரந்தரமாக ஒரு சிலை வைக்கப்படுவதை அரசாங்கம் சகித்துக்கொள்ளாது என்பதைத்தான் அது காட்டுகிறது. இது நினைவு கூர்வதில் தமிழ் மக்களுக்கு உள்ள வரையறைகளை உணர்த்தும் இடம்.

ஆனால் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நினைவு கூரும் உரிமை உண்டு. நிலை மாறு கால நீதியின் நான்கு தூண்களில் ஒன்று என்று கூறப்படுகின்ற இழப்பீட்டு நீதி என்ற பிரிவின் கீழ் தமிழ் மக்களுக்கு நினைவு கூர்வதற்கான உரிமை உண்டு.அந்தத் தீர்மானத்துக்கு அப்போது இருந்த இலங்கை அரசாங்கம் அனுசரணை வழங்கியது. இலங்கை அரசாங்கம் ஒன்றின் இணை அனுசரணையோடு நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் அது.

தமிழ் மக்கள் நிலைமாறு கால நீதியை ஏற்றுக்கொள்ளவில்லை. இக்கட்டுரையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் நிலைமாறு கால நீதிக்குரிய தீர்மானத்தின் தொடர்ச்சியாகத்தான் பதவிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் ஐநாவுக்குச் சென்று அங்கே அனைத்துலக சமூகத்துக்கு விளக்கங்கூற வேண்டியிருக்கிறது.

நிலைமாறு கால நீதியின் தூண்களில் ஒன்றாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நினைவு கூரும் உரிமை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் கடந்த 11 ஆண்டுகளாக நினைவு கூர்தல் ஒரு சட்டப் பிரச்சினையாகவே கையாளப்பட்டு வருகிறது. இந்த விடயத்தில் இழப்பீட்டு நிதிக்கான அலுவலகத்துக்குரிய சட்ட ஏற்பாடுகளை வரையும்போது, அப்பொழுது நிலை மாறு கால நீதியின் தமிழ்ப் பங்காளிகளாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பொருத்தமான ஏற்பாடுகளை அங்கே இணைக்கத் தவறிவிட்டது என்று ஒரு சட்டச் செயற்பாட்டாளர் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். அதனால்தான் கடந்த 11 ஆண்டுகளாக நினைவு கூர்தல் ஒரு சட்டப் பிரச்சினையாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.

அரசாங்கம் இந்த விடயத்தை இரண்டு தளங்களில் கையாள முற்படுகிறது. முதலாவது, இதை ஒரு சட்டப் பிரச்சினையாகக் காட்டுகிறது. இரண்டாவதாக, இது தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடு என்று காட்டப் பார்க்கிறது.

அமைச்சர் சந்திரசேகரன் தமிழ்க் கட்சிகளுக்கு இடையே மோதலை ஊக்குவிக்கின்றார். தமிழ்க் கட்சிகளும் இந்த விடயத்தில் இரண்டாக நிற்கின்றன. மட்டக்களப்பில் திலீபனின் நினைவு நாளை இரண்டாக நின்று அனுஷ்டித்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் அதை அவ்வாறு இரண்டாக நின்று அனுஷ்டிக்கவில்லை. ஆனால் நினைவு நாட்கள் முடிந்ததும், சிலையை வைத்துக்கொண்டு இரண்டாகி நின்று மோதுகிறார்கள். யாருக்கு எதிராக ஒன்றாகத் திரள வேண்டுமோ அது நடக்கவில்லை. மாறாக தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஒருவர் மற்றவர் மீது குற்றச்சாட்டுகளை வைக்கிறார்கள்.

ஆனால் இது சட்டப் பிரச்சினையும் அல்ல. தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளின் பிரச்சினையும் அல்ல. இது தமிழ் மக்களின் நினைவு கூர்வதற்கான அரசியல் உரிமை அதாவது தமிழ் மக்களின் கூட்டுரிமையோடு சம்பந்தப்பட்ட விவகாரம். இது ஓர் அரசியல் விவகாரம். இதனை அரசியலாகத்தான் பார்க்கவேண்டும்.




அரசியலாகத்தான் கையாள வேண்டும். அதற்கு எதிரான போராட்டங்கள் அரசியல் போராட்டங்களாகத்தான் இருக்கலாம். தமிழ்ச் சமூகத்தின் நினைவு கூரும் உரிமை தொடர்பான ஓர் அரசியல் போராட்டம் இது. எனவே இதை அதற்குரிய அரசியல் அடர்த்தியோடு போராட வேண்டும். இந்த விடயம் தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளைப் பிரதிபலிப்பதை இயன்ற அளவுக்குத் தவிர்க்க வேண்டும். அதாவது அரசாங்கம் விரும்புவதை தமிழ்க் கட்சிகள் செய்யக்கூடாது.

எ

# பெருந்தோட்ட மக்கள் அனுபவித்த அடிமைத்தனத்தையும் அவலத்தையும் உலகறியச் செய்த ஒரு படைப்பாளியும் போராளியுமான மூனாசீனா



- சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர், லண்டன் -

**அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய் தன்நோய்போல் போற்றாக் கடை.**

பிறருடைய துன்பத்தை தனது துன்பம் போன்று புரிந்து அதற்கு ஏற்றவகையில் செயற்படுவதன் தேவையை வலியுறுத்தும் இந்த குறளின் கருத்திற்கு அமைய வாழ்ந்து மறைந்தவர் "சாகித்திய ரத்னா" முருகன் சிவலிங்கம்.

இலங்கையில் இன்றளவும் சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்னடைந்த நிலையில் இருக்கும் சமூகம், பெருந்தோட்டத்துறையில் ஆண்டாண்டுகளாக அடிமைச் சங்கிலியில் சிக்கி அதிலிருந்து மீண்டுவர முயன்றும் முடியாமல் தவித்து தங்கள் உயிரையே உரமாக்கி உழைக்கும் இந்திய வம்சாவளி மக்கள்.

அவர்களின் இருநூற்று ஆண்டுகால துன்பங்களை சொல்லி மாளாது. நரபலி தொடங்கி நவகாலனித்துவ அடிமைகளாக இருக்கும் அவர்களது வாழ்வு கண்ணீர் காவியங்களில் ஒன்று. அப்படியான கண்ணீர் காவியங்களை உருவாக்கி மலையக பெருந்தோட்ட மக்களின் அவலத்தை தனது எழுத்துக்கள் மூலம் உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றவர் காலஞ்சென்ற ஐயா மு.சி.

சில வாரங்களுக்கு முன்னர் அவரது அமுத விழாவை (அகவை 80 ஆண்டு விழாவை) மலையக மக்கள் முன்னெடுத்து நடத்தினர். அச்சமயம் அவரது சமூக பங்களிப்பை போன்றும் வகையிலான "சிவாமுதம்" என்ற மலரும் வெளியானது.

அந்த விழாவில் பேச நான் அழைக்கப்பட்டிருந்த நிலையில், என்னால் பங்குபெற இயலாத நிலை ஏற்பட்டது. எனினும் நவமபர் மாதம் கொழும்பில் நடைபெறும் பாராட்டு விழாவில் அவசியம் பங்கேற்பேன் என்று நான் வாக்குறுதி அளித்திருந்த நிலையில், அந்த எண்ணம் ஈடேறாமல் அவர் அமரராகிவிட்டார்.

எனக்கும் அவருக்குமான தொடர்பு, மூன்று தசாப்தங்களுக்கும் மேலானது. எனக்கும் அவருக்கும் இடையேயான முக்கியமான உரையாடல் ஒன்று லண்டனில் கடுங்குளிர் நிலவிய ஒரு நாளில் இடம்பெற்றது.

எனது அன்றாட "லண்டன் பிபிசியின் உலக சேவையிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழோசை" வானொலி ஒலிபரப்பு மற்றும் இணையத்தில் செய்திப் பதிவு ஆகியவற்றை நிறைவு செய்து நான் ரயிலில் வீடு திரும்பி கொண்டிருந்தேன். அவர் கொழும்பிலிருந்து ஹட்டனுக்கு பேருந்தில் சென்று கொண்டிருந்தார். எங்கள் உரையாடலின் தெளிவு மற்றும் தொடர்பு இரு நாடுகளின் தொ(ல்)லைதொடர்பு (வ)சதியை பொறுத்தே இருந்தது. இதற்கு அப்பாற்பட்டு ரயில் பயணமும் பேருந்து பயணமும் தொடர்ந்தது.

இலங்கையில் போரும்-போர் நிறுத்தமும் எப்படி இடையிடையே நின்றும் - நீண்டும் சென்றதோ அதே போன்று தான் எங்கள் உரையாடலும் இருந்தது. "தமிழோசை" வானொலி தொடர் ஒன்றிற்காக நான் திட்டமிட்டுக்கொண்டிருந்த சமயம் அது. அது குறித்த அலோசனைக்காக அவரிடம் உரையாடிய சந்தர்ப்பம் அது.

ஆனால், அந்த சமிஞ்கை இடைஞ்சலுக்கு அப்பாற்பட்டு எமது பிணைப்பிற்கு அடிகோலிட்ட அந்த உரையாடல் தொடர்ந்தது. இந்திய வம்சாவளி தமிழர்கள் மீது எனக்கு இயற்கையாகவே இருந்த பற்று, அவர்களின் வாழ்க்கை தரம் பற்றிய கவலை, அவர்களின் அன்றாட வாழ்வியல் அவலம், அதற்கு தீர்வு என்னவாக இருக்கும், அதற்கு ஒரு ஊடகவியலாளராக என்ன செய்ய முடியும் என்று எனக்குள் மிக நீண்டகாலமாக ஓடிக் கொண்டிருந்த சிந்தனை அவருடனான அந்த உரையாடல் மூலம் மேலும் வலுவடைந்தது.



இந்த சவால் உந்துதலாக மாற அதை எதிர்கொள்ள பெருந்தோட்ட மலையக மக்களின் பின்புலம், வாழ்வியல் அவலங்கள் போன்றவை குறித்து மேலும் எனது புரிதலை வளர்த்துக்கொள்ளும் ஆர்வம் மேலிட்டது.

பலரிடம் இந்த புரிதலுக்காக யாரிடம் பேசுவது ஆகச்சிறந்ததாக இருக்கும் என்று நான் வினவிய போது, அனைத்து பதில்களும் ஒருவரை நோக்கியே கை காட்டின- திரு மு சிவலிங்கம் ஐயா அவர்களை நோக்கிய கைகாட்டல் அது.

சுமார் 50 நிமிடங்கள் நீடித்த அந்த உரையாடல், மலையகம் குறித்த எனது புரிதல், அந்த மக்களுக்கு ஆதரவாக நிற்க வேண்டும், இயன்ற உதவிகளை செய்ய வேண்டும், அவர்களின் தீராத வாழ்க்கை பிரச்சனைகளை பன்னாட்டளவில் கொண்டு செல்ல வேண்டும் போன்ற பல அம்சங்களில் எனது ஆர்வம் மற்றும் உறுதிப்பாட்டை மேலும் கூர்மைப்படுத்தியது என்பது உண்மை.

பிறகு எம்மிடையேயான உரையாடல்களும் தொடர்புகளும் அதிகரித்தன. இலக்கியம் மற்றும் சமூகப் பணியில் மிகவும் பரபரப்பாக இயங்கி கொண்டிருந்த அவர் எனக்கு நேரம் ஒதுக்க தயங்கியதில்லை.

பின்னர் அவரது படைப்புகளை மனமுவந்து லண்டனுக்கே அனுப்பி மலையக மக்களின் வாழ்வியலை மேலும் புரிந்தும் அறிந்தும்கொள்ள உதவினார். அந்த புத்தகங்களை நான் வாசித்த பிறகு லண்டனிலுள்ள தமிழர்களும் வாசித்து மலையக மக்களின் நிலையை உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் அவற்றை அங்குள்ள அரச நூலகம் ஒன்றிற்கு கொடுத்தேன்.

அப்படி அவர் அனுப்பி நான் இரண்டே நாட்களில் வாசித்து முடித்த நெடுங்கதை மலையகத்து கண்ணீர் காவியமான "ஒப்பாரி கோச்சி". அற்புதமான அந்த படைப்பில் ஒரு சிறிய அம்சம் விடுபட்டிருந்தது. அதாவது, முதல் பக்கத்தில், "பலவீனமாவர்கள் வாசிப்பதை தவிர்க்கவும்" என்று ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கலாம்.

ஏனென்றால், அந்த உண்மைப் புதினம் அந்தளவிற்கு நெஞ்சை உருக்குவதாக இருந்தது. வாசிக்க வாசிக்க கலக்கமும், கவலையும் தொற்றி கொண்டன. அற்புதமான அந்த படைப்பு ஒரு உயிரோவியம். இரு அரசுகளின் வஞ்சகம் மற்றும் சுயநலன்கள் காரணமாக எவ்வாறு பல்லாயிரக்கணக்காணவர்கள் ஒரே இரவில் நிர்கதி ஆக்கப்பட்டனர் என்பதை விவரிக்கும் ஒரு ஆவணம். அது புதினம் என்பதற்கு அப்பாற்பட்டு ஒரு வரலாற்று துரோகத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கும் காலத்தின் சாட்சியம்.

தமிழ்நாட்டில் லா ச ரா (லால்குடி சப்தரிஷி ராமாமிருதம்) அவர்களின் "அபிதா, பிராயச்சித்தம்", ஜெயகாந்தனின் "சில நேரங்களில் சில மனிதர்கள்", அகிலனின் "சித்திரப்பாவை", ராஜம் கிருஷ்ணனின் "கரிப்பு மணிகள், வேருக்கு நீர்", சுந்தர ராமசாமியின் "ஒரு புளிய மரத்தின் கதை", அசோகமித்ரனின் "தண்ணீர்", தோப்பில் முகமது மீரானின் "சாய்வு நாற்காலி" போன்ற படைப்புகளில் இருந்த வீச்சு, ஆழம், தாக்கம், ஆகியவை எனக்கு மு சிவலிங்கம் ஐயாவின் "ஒப்பாரி கோச்சியை" வாசித்த போது ஏற்பட்டது.

குருதி தோய்ந்த அந்த அழியா காவியம் எக்காலத்திற்கும் இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் அவலத்தை தோலுரித்து காட்டும் ஒரு படைப்பு. ஒரு இனத்தின் துயரத்தை இதைவிட வேறு வகையில் சிறப்பாக ஆவணப்படுத்த முடியாது. அப்படி அதை காலத்தின் கண்ணாடியாக ஒரு இனத்தின் சுரண்டலை, வெளிவர முடியாத அடிமைத்தனத்தை, எழுத்துக்களில் வடித்த ஒரு சிற்பி ஐயா சிவலிங்கம் அவர்கள்.

வலிந்து நாடு கடத்தப்பட்டவர்களின் வேதனையை வார்த்தைகளில் செதுக்கியவர் அவர். வேதனை என்பதை அனுபவித்தால் மட்டுமல்ல, வாசித்தாலும் ஆழமாக உணர முடியும் என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துகாட்டுகளில் ஒன்று "ஒப்பாரி கோச்சி". வடக்கு-கிழக்கு பிரச்சனை வேறு மலையக பிரச்சனை வேறு என்று பேசுபவர்களில் எவ்வளவு பேர் "ஒப்பாரி கோச்சி" புதினத்தை வாசித்திருப்பார்கள் என்று தெரியவில்லை. ஆனால், வாசித்துள்ளவர்கள் இதுவும் ஒரு இனப்பிரச்சையின் அடிநாதம் என்பதை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், மனதளவில் உணர்வார்கள், உணர வேண்டும்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் 1964லிலிருந்து, இந்தியா திரும்பிய உறவினர்கள், நண்பர்கள் அடிக்கடி, கண்ணீரில் நனைந்தக் கடிதங்களையே அனுப்பிக் கொண்டிருந்தனர்.

"என் இரு கண்களிலும் கிடைக்கப் பெற்ற சுக்குருவுக்கு தங்கவேலு எழுதும் கடதாசி. நாங்கள் இப்பவும் கடவுள் கிருபையால் ஷேமமாக இருக்கோம். தம்பி இந்தியாவுக்கு வர்ற ஆசைய வுட்டுப்புடு..! நாங்க ஏமாந்துட்டோம். குடும்ப கார்டு எல்லாம் பொய்யி. புனர் வாழ்வும் பொய்யி. இங்க இருக்கிறவனெல்லம் மனுசங்களே கெடையாது. திருட்டு, ஏமாத்து, பொய்தான் வாழ்க்க". வாக்குவாடம் செஞ்சா.. வெட்டு, கொத்து, கொலை "எல்லாருமே கொடூரமானவங்க".

"தந்தை நாடு" கைவிட "தாய் நாடு" திரும்பியவர்களின் நிலையை ஒரு கடிதத்தின் மூலம் வலி மிகுந்த வார்த்தைகளால் இதைவிட ஆழமாக விவரிக்க முடியாது. இது அவரது அபாரமான படைப்புகளிலுள்ள வீச்சின் ஒரு மிகச்சிறிய எடுத்துக்காட்டு மட்டுமே. அவரது எழுத்துக்களை இதுவரை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாசிக்காதவர்கள் துர்பாக்கியசாலிகள் என்று கூறலாம்.

அவரது எழுத்துக்களின் வீச்சால் ஏற்படும் தாக்கத்தின் பரிமாணத்திற்கு மேலும் ஒரு சிறந்த உதாரணம் "பஞ்சம் பிழைக்க வந்த சீமை". இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் வறுமையின் பிடியில், சமூகத்தில் மிகவும் பின் தங்கியிருந்த மக்கள், எப்படியாவது தமது வாழ்வு மலராதா என்ற ஏக்கத்துடன், எதிர்பார்ப்புகளுடன், கனவுகளுடன், பெரிய படுகுழி ஒன்றிற்குள் தள்ளப்படுகிறோம் என்பதை அறியாமல், இக்கரைக்கு அக்கரை பச்சை என்று நினைத்து, நிரந்தர அடிமைகளாக மாற போகிறோம் என்பதை உணராமல், காலனித்துவ ஆட்சியாளர்களால் ஏமாற்றி இலங்கைக்கு எப்படி அழைத்துவரப்பட்டனர் என்பதை விவரிக்கும் அமர காவியம் "பஞ்சம் பிழைக்க வந்த சீமை".

விளக்கில் வீழும் விட்டல் பூச்சிகளைப் போன்று, ஆசை வார்த்தைகளை நம்பி, அவலத்திலிருந்தும், அவமானத்திலிருந்தும் மீளலாம் என்ற நப்பாசையுடன், புதைகுழியை நோக்கி காலடெத்து வைத்து, இலங்கையின் மலையகத்தில், மண்ணோடு மண்ணாக புதைந்து, தேயிலை தோட்டங்களுக்கு உரமாகி காலத்தால் அழிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களின் கதை அது. "செக்கு மாடு சுற்றி வரலாம் ஊர் போய்ச் சேராது" என்பது போல், தமிழகத்தின் வடக்கு மற்றும் மத்திய மாவட்டங்களிலிலிருந்து, காலில் செருப்பு கூட இல்லாமல், கட்டிய வேட்டியுடன், உள்ளூரில் வாங்கிய கடனை எப்படியாவது தீர்க்க வேண்டும் என்ற சூழலில் ஒரு வழி பயணமாக தொடங்கியவர்களின் கதை தான் "பஞ்சம் பிழைக்க வந்த சீமை". ஆனால் அவர்களின் உடல் பஞ்சடைத்து, உளுத்துப் போய், உருக்குலைந்து சிதைக்கப்பட்டவர்களின் கண்ணீர் கதை அது. அந்த "செக்கு மாடுகள்" ஒரு போதும் சுகத்தை அனுபவிக்கவும் இல்லை, ஊரும் போய்ச் சேரவில்லை.

"பஞ்சம் பிழைக்க வந்த சீமை" மற்றும் "ஒப்பாரி கோச்சி" படைப்புகளுக்கு இடையே ஒரு ஒற்றுமை உண்டு. இரண்டுமே அவலங்கள் மற்றும் ஏமாற்றத்தின் கதை. ஒன்று வந்தவர்களின் கதை, மற்றது வந்து, நொந்து, நைந்து போய் விரட்டப்பட்டவர்களின் கதை.

(தொடர்ச்சி 15 பக்கம்)

உலக செய்திகள்
World News

# நடிப்பால் எண்ணற்ற கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டியவரென சிவாஜி கணேசனை நினைவுகூர்ந்த நயினார் நாகேந்திரன்




நடிப்பால் எண்ணற்ற கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டியவரென சிவாஜி கணேசனை நயினார் நாகேந்திரன் நினைவுகூர்ந்தார். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 99-வது நாளையொட்டி பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது, நடிப்பின் மூலம் எண்ணற்ற கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டி, தலைமுறைகள் போற்றும் கலைச்சாதனைகளைப் படைத்த மாபெரும் கலைஞர் நடிகர் திலகம், செவாலியே சிவாஜி கணேசன் பிறந்த நாள் இன்று. தமிழ் மொழியின் அழகையும், உணர்வுகளின் ஆழத்தையும் தனது தனித்துவமான நடிப்பாற்றலால் உலகறியச் செய்தவர். அவரது கம்பீரமான குரல் வசன உச்சரிப்பு, முகபாவனை மற்றும் நடிப்பின் ஆழம் ஆகியவை இன்றளவும் கலைத்துறையினருக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. இந்திய திரையுலகின் பெருமையை உலக அரங்கில் உயர்த்திய செவாலியே நடிகர் திலகம் சிவாஜி கணேசன், புகழும், கலைப் பங்களிப்பும் என்றென்றும் நிலைத்திருக்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராகுல்காந்தி தலைமையை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளனயென தெரிவித்துள்ள மாணிக்கம் தாகூர்



ராகுல்காந்தி தலைமையை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளனயென தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி. தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

தேசத்தின் ஜனநாயகத்தையும், அரசமைப்புச் சட்டத்தையும் காக்கும் முதன்மையான மக்கள் தலைவராக விளங்குவது ராகுல்காந்தி மட்டுமே என்பதை ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளன. ராகுல் காந்தி தலைமை ஏற்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி வெளிப்படையாக அறிவித்திருப்பது, மக்கள் குரலின் தவிர்க்க முடியாத வலிமையைக் காட்டுகிறது. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெளிவான வழிகாட்டுதலின் படி, எவ்வித தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கும் இடமளிக்காமல், நாட்டின் தலையாய ஜனநாயகக் கடமையே கூட்டணிக்கு முதன்மையானது என்பதை இந்திய முன்னணி மீண்டும் திட்டவட்டமாக நிரூபித்துள்ளது. அரசியலமைப்பு நிறுவனங்களை அழித்து, மக்களின் வாக்குரிமையைச் சிதைக்க நினைக்கும் சர்வாதிகார பாஜக ஆட்சியை வீழ்த்தி, சாமானிய மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் இந்த ஒற்றுமை இறுதிவரை சமரசமின்றி தொடரும். ஒற்றுமையே நமது வலிமை மக்கள் குரலே நமது வெற்றி. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடிகர் சிவாஜி கணேசன் 99வது பிறந்தநாளையொட்டி மரியாதை செலுத்திய த.வெ.க அமைச்சர்கள்



நடிகர் சிவாஜி கணேசன் 99வது பிறந்தநாளையொட்டி அமைச்சர்கள் மரியாதை செலுத்தினர். நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 99வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. இதைமுன்னிட்டு தமிழக அரசின் சார்பில் அமைச்சர்கள் சிவாஜி கணேசனின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

சென்னை அடையாறில் உள்ள நடிகர் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் அவரது உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தமிழக அரசு சார்பில் சட்டமன்றத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர், அமைச்சர்கள் ராஜ்மோகன், வெல்கடரமணன் ஆகியோர் சிவாஜி கணேசன் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். மேலும், இந்நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் எம்.எல்.ஏ.வும் அமைச்சருமான வன்னி அரசு, நடிகர் பிரபு, நடிகர் நாசர், விக்ரம் பிரபு மற்றும் சிவாஜி கணேசன் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

# ஜெம் வீரமணி மீது பாய்ந்த குண்டர் சட்டம்



போக்சோ வழக்கில் கைதான ஜெம் கிரானைட்ஸ் உரிமையாளர் வீரமணி மீது குண்டர் சட்டம் பாய்ந்தது. சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக, ஜெம் கிரானைட் நிறுவன உரிமையாளர் வீரமணியும் அவருக்கு உடந்தையாக இருந்ததாக சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்ஹன் உள்ளிட்டோர் கடந்த ஆக. 28 ஆம் தேதி கைது செய்யப்பட்டனர். இதே குற்றச்சாட்டில் ஜெம் வீரமணி உதவியாளர் கணேசன் கடந்த வாரம் கைது செய்யபட்டு சிறையில் உள்ளார்.

இந்தநிலையில், பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தொழிலதிபர் ஜெம் வீரமணி உள்ளிட்ட 3 பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்துள்ளது. ஜெம் வீரமணி, அவரது உதவியாளர் சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்ஹன் ஆகியோரை குண்டர் தடுப்புக்காவல் சட்டத்தில் அடைக்க சென்னை பெருநகர காவல் ஆணையர் அமல் ராஜ் உத்தரவிட்டுள்ளார். ஜெம் வீரமணி மீது ஏற்கனவே 2 போக்சோ வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், தற்போது அவர் மீது குண்டர் சட்டமும் பாய்ந்தது.

இவர்களுடன், சென்னை பெருநகரில் தொடர் குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொது அமைதிக்கு பங்கம் விளைவித்த நபர்கள் மற்றும் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்ட மேலும் 11 பேரையும் குண்டர் தடுப்புக்காவல் சட்டத்தில் சிறையில் அடைக்க, சென்னை பெருநகர காவல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

# இந்திய விமானி ஸ்மித் மச்சார் குறித்து தேசமே பெருமிதம் கொள்கிறதென பாராட்டியுள்ள குடியரசு தலைவர் திரவுபதி முர்மு



இந்திய விமானி ஸ்மித் மச்சார் குறித்து தேசமே பெருமிதம் கொள்கிறதென குடியரசு தலைவர் திரவுபதி முர்மு பாராட்டியுள்ளார். துபாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இஸ்ரேல் நாட்டின் தலைநகர் டெல் அவிவில் உள்ள பென் குரியன் சர்வதேச விமான நிலையம் நோக்கி புறப்பட்ட போயிங் ரக விமானத்தில் 27 குழந்தைகள் உள்பட 174 இஸ்ரேலிய பயணிகள் மற்றும் விமானப் பணிப்பெண்கள் என மொத்தம் 180-க்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.

விமானத்தில் இந்திய கேப்டன் ஸ்மித் மச்சார் தனது சக விமானியான துணை விமானியால் கத்தியால் குத்தினார். ரத்த வெள்ளத்தில் சரிந்த கேப்டனிடமிருந்து விமானத்தின் கட்டுப்பாட்டைப் பறித்த அந்த கொடூர துணை விமானி, தற்கொலைத் தாக்குதல் நடத்தி ஒட்டுமொத்த பயணிகளையும் கொல்லச் சதி செய்தார். கேப்டன் ஸ்மித் மச்சர் காயமடைந்த நிலையிலும், விமானத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர துணை விமானியுடன் கடுமையாகப் போராடி, விமானம் விபத்துக்குள்ளாகாமல் சவுதி அரேபியாவின் தபூக் நகரில் அவசரமாகத் தரையிறக்கி காப்பாற்றினார். விமானத்தில் இருந்த 180 பயணிகளின் உயிரை காப்பாற்றிய இந்திய விமானிக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன. இவரின் துணிச்சலான செயலையும், தேசப்பற்றையும் பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆகியோர் பாராட்டி உள்ளனர்.

இதைத்தொடர்ந்து, கேப்டன் ஸ்மித் மச்சாரின் அசைக்க முடியாத மன உறுதிக்கு தலைவணங்குகிறேன் என்று குடியரசு தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், கேப்டன் ஸ்மித் மச்சார் குறித்து தேசமே பெருமிதம் கொள்கிறது. அவரது வீரமும், இக்கட்டான சூழலிலும் அவர் வெளிப்படுத்திய சமயோசிதமும் நம் அனைவரின் மனதையும் ஆழமாகத் தொட்டுள்ளன. மிகவும் ஆபத்தான சூழலில் படுகாயமடைந்த நிலையிலும், மற்றவர்களின் உயிரைக் காப்பதில் அவர் உறுதியுடன் செயல்பட்டார். அவரது துணிச்சலும் துரிதமான நடவடிக்கையும் ஒரு பெரும் துயரத்தைத் தவிர்க்கவும், பல விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றவும் உதவின. அவரது தளராத மன உறுதியை நான் வணங்குகிறேன். அவர் விரைவில் குணமடைந்து நலம் பெற வேண்டிக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் மீது ரஷியா நடத்திய தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர்



உக்ரைன் மீது ரஷியா நடத்திய தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். உக்ரைன் ரஷியா போர் 4 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றன. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் நடத்தியது. உக்ரைனின் தலைநகர் கீவ் மீது ரஷியா ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர்.


புரட்டாசி
சனி
விரத சாப்பாடு
புரட்டாசி மாதம் அனைத்து
சனிக்கிழமைகளிலும் கிடைக்கும்.
HSB
CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Scarborough
1571 Sandurst Circle, Unit 12B, Mississough, ON. MV 1V2.
Tel: 416 290 7755
Mississauga
4559 Hurontario Street, Unit 12B, Mississauga, ON. L4Z 3R1.
Tel: 905 290 0769
Brampton
295A Queentario Street, Unit 5B, Mississauga, ON. L6W 3R1.
Tel: 905 457 0769
Delta
8701 - 120th Street, Delta, BC ON. VAC 6R4.
Tel: 778 598 7755

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் விஜயதசமியை முன்னிட்டு சிறப்பு பூசை

குருவடி சரணம்

திருவடி சரணம்





**மார்க்கம் ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்துர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்**

**10-10-2026 சனிக்கிழமை தொடக்கம் 21-10-2026 மாலை 5:00 மணி முதல் விஜயதசமி சிறப்பு பூசைகள் நடைபெற்று 9:00 மணியளவில் சிறப்பு ஆராதனை நடைபெற்று முடிவடையும். கலைநிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும். அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.**

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647



Carefirst
Family Health Team

## Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**




11/24





RE-ELECT
# NICK MANTAS
FOR CITY COUNCILLOR
Ward 22 | Scarborough-Agincourt

## GETTING THINGS DONE FOR OUR COMMUNITY

Des résultats concrets pour notre communauté

为我们的社区做实事

Με έργο και αποτελεσματικότητα για την κοινότητα μας

Կը նպաստեմ ու կ՚աջակցիմ համայնքի կարիքներուն

عملٌ ونتائجُ من أجل مجتمعن

நமது சமூகத்திற்காக செயல்பட்டு பலன்களை வழங்குகிறோம்

ہماری کمیونٹی کے لیےکام اور نتائج

Naghahatid ng mga resulta para sa ating komunidad.

Learn more at www.nickmantas.com
hello@nickmantas.com | 416-321-8898


METROPOLITAN CENTRE
KENNEDY & FINCH
3840 FINCH AVE E, SCARBOROUGH, ON M1T 3T4
OCT 3, 2026 | SATURDAY @ 6 PM
Title Sponsor
Vijaya Jewellery
TICKET AVAILABLE HERE
Scarborough
Cell Tell Mobility
2611 Eglinton Ave East
416-266-6818
Sun City Supermarket
2761 Markham Rd
(416) 724-6666
Gunaams Supermarket
145 Morningside Ave Unit 33
(416) 283-9998
Cell Tell Mobility
Birchmount Road / Finch
2950 Birchmount Rd Unit# 5C
(416) 495-7776
Kennedy & Ellesmere
Samy & Sons
416-298-1598
Ruby & Ruby Saree Palace Inc.
2843 Lawrence Ave Est
416-264-7833
Markham & Steeles
New Ranganas Jewellery
6055 Steeles Ave E Unit C102
(647) 947-2864
Vijaya Jewellery
3341 Markham Rd #127,
(437) 833-3197
NEW ROYAL FASHIONS
6055 Steeles Ave E
(416) 519-1119
Sprin Florist Canada
3011 Markham Rd
416-893-2624
Majestic City
Designs 2 Prints LTD
Tel: 647-858-2290
GTA Square Mall
Winners Lotto Centre
Tel: 416-291-9990
Eraa plaza (Neilson / Finch)
Sai Elanthulir Fashion
Jewellery & Money Transfer
Tel: 416-471-1002
Tapscott Rd / Finch ave
MS Convenience
416-332-0961
5633 Finch Ave E units 5
Middlefield Rd & Steeles Ave
Pasumai Market
2-2002 Middlefield Rd, Markham,
(905) 472-5525
Etobicoke (Kipling & Steeles)
A S A Financial Service
(in Uthayas Supermarket)
Tel:416-742-1425
AJAX (Harwood & Taunton Rd)
New Spiceland Restaurant
905-426-4445
Mukesh
Playback Singer
Varsha S krishnan
Zee Tamil Title Winner
Santhosh Subramanian
Playback Singer
Magisha
Super Singer
Venkat
Tabla
Manikandan
Keybordist
Old is gold
நெஞ்சம் மறப்பதில்லை
Thalalaya Live Band
SCAN NOW
GET 20% OFF YOUR TICKET!
Amazing Electric Motors Ltd
VIBRANT HOSPITALITY GROUP
STANDARD MORTGAGES INC.
RAJ SUBRAYAM
CEO
416-993-2638
SHIVAS CHICKEN
WHOLE SALE CANADA INC
416-910-3244
186 Bartley Dr. #12A, Toronto, ON
TICKETS $30 | $50 AND VIP
More Info 416-564-9642 | 416-566-0790
H&ME
KT GROUP
BEHIND ME MEDIA
Guna Selliah
Insurance Broker
416.317.6500
நியூ ரங்கனாஸ்
North Toronto CREMATORIUM
Royal Fashions
Ocean Accounting Tax Consultants
Accounting Services for Personal and Small Business
Spring
For All Moments of Life
416-893-2624 647 218 6222
TSA MEAT STORE
437-886-2597
647-328-8880
Canadian Tamils' Business Directory
TAMILS' GUIDE
Athavan Publications Inc.
Tel: 416.615.4646
info@tamilsguide.com
771 Brimley Road,
Scarborough, ON, Canada, M1J 1C7
Senthi Chelliah
President & CEO
www.tamilsguide.com
Our Services
Oasis
ONLINE: 416-623-8110
YUGAM RADIO
Ravi: 416- 898-7284
Ruby: 416-670-6522
JRB
R.R.Rajkumar
647-289-6164

## ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்ட தமிழ்த் திரை இசையமைப்பாளரும் இயக்குனருமாகிய மிஸ்கின் !

7வது ஆண்டில் காலடி எடுத்துவைத்த ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் 2026ம் ஆண்டிற்குரிய அங்குரார்ப்பண வைபவம் கடந்த 22-09-2026 அன்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. ரொறன்ரோ சர்வதேச தமிழ் திரைப்பட விழாவின் நிறுவனர் செந்தூரன் நடராஜா மற்றும் இயக்குனர் கிருத்திகா ஆகியோரின் மேற்பார்வையில் பல நண்பர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களின் ஆதரவோடு கடந்த வருடங்களைப் போல இவ்வருடமும் கோலாகலமாக நடைபெற்றது என்றால் அது மிகையாகாது.

மேற்படி சிறப்பு வைபவத்தில் கலந்து சிறப்பித்த தமிழ்த் திரையுலகின் இசையமைப்பாளர் மற்றும் இயக்குனர் மிஸ்கின் அவர்கள் ஆற்றிய உரை அறிவு சார்ந்த ஒன்றாகவும் ஈழத் தமிழர்கள் மீது அவர் கொண்டிருக்கும் அக்கறை மற்றும் பாசம் அத்துடன் எமது மக்களின் திரைப்படத்துறை மீதான கவனம் மற்றும் தென்னிந்திய திரைப்படங்களுக்கு தொடர்ச்சியாக வழங்கும் ஆதரவு போன்ற விடயங்களை தழுவியதாக அமைந்தது. எமது மக்களின் வலிகளை நன்கு புரிந்து கொண்ட ஒரு தமிழ்த் திரைப்பட இயக்குனராகவும் கலைஞராகவும் அவர் அன்றைய தினம் கலந்து கொண்டமை கனடா வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு "கொண்டாட்டம்" போல அமைந்ததாக அங்கு வாழ்த்துரை வழங்கிய "உதயன்" பிரதம ஆசிரியர் குறிப்பிட்டமை மிகவும் பொருத்தமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

மேற்படி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய மார்க்கம் நகர மேயர் பிராங்க் ஸ்கெப்பட்டி மற்றும் கனடிய தமிழ்த் திரைப்பட இயக்குனர் லெனின் சிவம் ஆகியோரின் வாழ்த்துரைகள் பயனுள்ள தகவல்களை நிறுவனர் செந்தூரன் நடராஜாவிற்கு வழங்கியவையாக அமைந்தன என்றும் கலைஞர் பலர் கருத்துத் தெரிவித்தனர்.













## ரொறன்ரோ சர்வதேச தமிழ் திரைப்பட விழா-2026 இன் விருதுகள் வழங்கும் வைபவத்தில் கௌரவிக்கப்பெற்ற தமிழ்க் கனடிய கலையுலக செயற்பாட்டாளர் வைரமுத்து சொர்ணலிங்கம்



கடந்த 25ம் திகதி வெள்ளிக்கிழமை மார்க்கம் நகரில் யோர்க் சினிமா அரங்கில் நடைபெற்ற ரொறன்ரோ சர்வதேச தமிழ் திரைப்பட விழா-2026 இன் அங்குரார்ப்பண வைபத்தைத் தொடர்ந்து 26ம் திகதி சனிக்கிழமை மற்றும் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களும் பல மொழித் திரைப்படங்கள் அங்கு திரையிடப்பெற்று முடிந்த பின்னர் 27ம் திகதி மாலை ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் விருதுகள் வழங்கும் வைபவம் ஸ்காபுறோவில் உள்ள "கிரான்ட் சினமன் கொன்வென்சன்" மண்டபத்தில் நடைபெற்றது.

வெகு விமர்சையாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இந்த விழாவிற்கும் திரைப்பட விழா நிறுவனர் செந்தூரன் நடராஜா மற்று கிருத்திகா ஆகிய இருவரும் முன்னின்று ஏற்பாடுகளைக் கவனிக்க அவர்களுக்கு ஆதரவாக வர்த்தகப் பிரமுகர்களும் ஏனைய கலையுலக மற்றும் ஊடகச் செயற்பாட்டாளர்களும் செயற்பட்டார்கள். எனவே மிகவும் சிறப்பாகவும் அழகிய முறையிலும் ரொறன்ரோ சர்வதேச தமிழ் திரைப்பட விழா-2026 இன் விருது வழங்கும் விழா தொடர்ந்தது.

ஆரம்பத்தில் திரைப்பட விழாவில் திரையிடப்பெற்ற பல மொழித்திரைப்படங்கள் மற்றும் குறும்படங்கள் என அனைத்திலும் தொடர்பாக வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பெற்றன. அவற்றைப் பெற்றுக்கொண்ட பல இனங்களையும் மொழிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் திரைத்துறை சார்ந்த இயக்குனர்களும் நடிக நடிகைகளும் மிகுந்த உற்சாகத்துடன் தங்கள் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

அன்றை விருது விழாவில் கௌரவிக்கப்பெற்ற தமிழ்க் கனடிய கலையுலக செயற்பாட்டாளர் வைரமுத்து சொர்ணலிங்கம் அவர்களின் 35 லருட கால கலை மற்றும் இசைத்துறைச் சேவைக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போது சபையில் அமர்ந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது















(9 பக்கத் தொடர்ச்சி)

## பெருந்தோட்ட மக்கள் அனுபவித்த அடிமைத்தனத்தையும் அவலத்தையும் உலகறியச் செய்த ஒரு படைப்பாளியும் போராளியுமான ,ூனாசீனா

---

ஐயா மு சிவலிங்கத்தின் இந்த இரண்டு படைப்புகளை நான் மேற்கோள் காட்டியுள்ளதற்கு காரணம் அவரது சிந்தனையோட்டம் எப்படிப்பட்டது என்பதை காட்டுவதற்கே. இயல்பாகவே அவருக்குள் ஒரு பொதுவுடமைச் சிந்தனை மற்றும் சிந்தாந்தம் இருந்தது என்பதை அவரது எழுத்துக்கள் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. அந்த படைப்புகளில் மலையக மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புகள், தீர்வின்றி தொடரும் பிரச்சனைகள் ஆகியவை பாரபட்சமின்றி முழுமையாக வெளிப்படும்.

அவரது எழுத்தின் வீச்சு, ஆழம் மற்றும் நீட்சி ஆகியவை சிங்கள படைப்பாளிகள் மத்தியிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின என்பது உண்மை. அதன் வெளிப்பாடாகவே அவரது பல படைப்புகள் சிங்கள மொழியிலும் வெளியாயின. சிங்கள பேரினவாத கடும்போக்கு கொள்கைகளை கொண்டிருந்த பெருவாரியான மக்களின் நடுவிலே மலையக மக்கள் மீதும்-பக்கசார்பற்ற சிந்தனையுடன் இருந்த சிங்கள மக்களும் கரிசனை கொண்டிருந்தார்கள் என்பதற்கு, மு சி அவர்களின் எழுத்தும், அது சிங்கள சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கமும் முக்கியமான காரணம்.

ஆனால், மலையக இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் நவகாலனித்துவ அடிமை நிலையை பெரும்பாலான சிங்கள மக்கள் உணரவில்லை அல்லது அவர்கள் "இந்திய கூலிகள்", நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? என்கிற எண்ணம் இன்றளவும் நிலவுகிறது என்பது கசப்பான உண்மை.

கையறு நிலையில் இருந்த மலையக பெருந்தோட்ட இந்திய வம்சாவளி மக்கள் "விதி வலியது" என்று தமது நிலையை நொந்து கொண்டு, லயன் வீடுகளும், கொழுந்தும், கறுத்த கைகளும், குழி விழுந்த கண்களும், ஒட்டிய கன்னங்களும், நொடிந்து போன வாழ்க்கையும், குளவிகளின் கடியும், சிறுத்தைகளின் தாக்குதலும், யானைகளின் அச்சுறுத்தலுமே தமது அன்றாட வாழ்வின் தீராத துன்பங்கள் என்கிற கசப்பான உண்மையை உணர்ந்த அவர்கள்- தமது வாழ்வை விதியிடம் விட்டுவிட்டனர் என்பதே யதார்த்தம். எரியும் தீயில் எண்ணெய்யை ஊற்றியது போன்று கசிப்பு வேறு.

இவை எல்லாவற்றையும் மிஞ்சும் வகையில், மலையக மக்களை அச்சுறுத்தி சுரண்டும் சந்தா அரசியல். அந்த சந்தா அரசியலின் அடிப்படை கோட்பாடு, "கிடைத்தவர்கள் பிரித்து கொண்டார், உழைத்தவர்கள் தெருவில் நின்றார் என்பதே".

இப்படியான சூழாலில் அவர்களின் வாழ்க்கை அவலத்தை தோலுரித்து வெளியுலகத்திற்கு காட்டிய ஒரு ஆளுமை ஐயா மு சி அவர்கள். அவரது படைப்புகளில் அந்த மக்களின் வலியும் வேதனையும் வெளிப்பட்டது. எப்படியான ஒரு நரக சூழலில் அவர்கள் இருநூறு ஆண்டுகளாக, வீடு, தோட்டம், கொழுந்து, அடிமை, என்று- மகாபாரத போரில் சக்கர வியூகத்தில் சிக்கிய அபிமன்யு போன்று - அந்த அபலை மனிதர்களின் கண்ணீர் கதையை வெளியுலகத்திற்கு தனது எழுத்தோவியத்தின் மூலம் எடுத்துச் சென்றார் ஐயா சிவலிங்கம் அவர்கள்.

நாக தீபம் அல்லது மணிபல்லவ தீவு அல்லது கண்ணீர் தேசம் என்ற இலங்கையில் சிலர் அறிந்திருந்தாலும், மலையகத்திலுள்ள இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்திராத ஒன்று, இலங்கையின் இனப்போராட்டம் மற்றும் அதற்கான தீர்வு வி'யத்திலும் ஐயா மு சிவலிங்கத்தின் பங்களிப்பும் கணிசமான வகையில் இருந்துள்ளது என்கிற விஷயம்.

இலங்கை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஒருங்கிணைந்திருந்த வடக்கு-கிழக்கு தனித்தனி மாகாணங்களாக பிரிக்கப்பட்டு அதிகாரப் பகிர்வு என்பது ஏட்டளவில் கூட இன்று இல்லை என்ற யதார்த்தமான நிலையில், மாகாணங்களுக்கு அதிகாரங்கள் முழுமையான வகையில் அளிக்கப்பட வேண்டும் என்று மத்திய மாகாண சபையில் உறுப்பினராக இருந்த மு சிவலிங்கம் தொடர்ந்து காத்திரமாக குரல் கொடுத்தார் என்பதை இன்றைய அதிகாரப் பகிர்வு குறித்து பேசும் அரசியல் தலைவர்களும், இளைய தலைமுறையினரும் அறிய வேண்டும்.

மாகாண சபை முறைமை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலேயே அவர் மாகாண சபையில் உறுப்பினராக செயற்பட்டவர். மக்களின் அடிப்படை தேவைகள் எப்படி கையாளப்பட வேண்டும் என்றும் அதற்கு அதிகாரப் பகிர்வு எவ்வளவு முக்கியமானது என்பதையும் அவர் மாகாண சபைக்கு உள்ளேயும் வெளியேயும் பேசிவந்தார் என்பதை அறிந்தவர்கள் அறிவார்கள்.

அதிகாரப் பகிர்வு முறைமையை ஒழிக்கும் நோக்கில், யார் நீதிமன்றம் சென்றார்கள், ஒருங்கிணைத வடக்கு-கிழக்கு மாகாண சபையை பிரித்தவர்கள் யார்? நாட்டிலுள்ள தமிழ் மக்கள்-மலையகத்திலுள்ளவர்கள் உட்பட யாரும் அதிகாரம் பெற்றுவிடக் கூடாது என்பதை உச்ச நீதிமன்றம் சென்று அதை நிறுத்தியவர்கள் யார் என்பதெல்லாம், இலங்கையின் கண்ணீர் கதைகளில் ஒன்று. இது இலங்கை சரித்திரத்தின் ஒரு பகுதி.

அந்த சமயத்தில் மு சி அவர்களும், அவரை போன்ற ஒத்த சிந்தனையுடைய வெகு சிலரும், அதிகார பகிர்வு, சமவாழ்வு, சகவாழ்வு போன்றவை எப்படி இருக்க வேண்டும் அதற்கு மாகாண சபை எப்படி செயற்பட வேண்டும், அதன் மூலம் நாட்டில் சமூக நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் கொண்டுவர முடியும் என்பதை யதார்த்த ரீதியில் சிந்தித்து செயற்படுத்தி அமைதியை நிலைநாட்ட முயன்றனர். சமூகத்தில் நிலவிய முரண்பாடுகள், மோதல்களை போன்றவைகளை களைய மு சி அவர்கள் கடும் நெருக்கடிகளுக்கு இடையே பங்களித்தார் என்பதெல்லாம் போருக்கு அப்பாற்பட்ட சரித்திரத்தின் ஒரு அங்கம்.

நானறிந்த வகையில் அவர் படைபாளியாக மட்டுமில்லாமல், ஒரு செயற்பாட்டாளராகவும் களத்தில் நின்றவர். மலையக பெருந்தோட்ட மக்களின் பிரச்சனைகள் உலகவில் பேசப்பேட வேண்டும் என்று மனதார விரும்பி அதற்கு தனது படைப்புகள் மற்றும் எழுத்துக்கள் மூலம் செயல்வடிவம் கொடுத்தவர் மு சி அவர்கள். இதை என்னால் உறுதிபட சான்றுகளுடன் கூற முடியும்.

அதேவேளை பிபிசி தமிழோசையில் நான் தயாரித்து வழங்கிய 15 வார தொடரான "மலருமா மலையக மக்களின் வாழ்க்கை"? வெற்றிபெற அறிவுரையும் ஆலோசனையும் அளித்து தொடர்புகளையும் ஏற்படுத்திக்கொடுத்தவர் மு சிவலிங்கம் அவர்கள். இச்சமயத்தில் அவரது அந்த "காலத்தால் செய்த உதவியை" நன்றியும் நினைவு கூறுகிறேன்.

இந்திய வம்சாவளி தமிழர்கள் இன்றளவும் இலங்கையில் ஒடுக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்ட ஒரு சமூகமாகவே உள்ளனர் என்பதை வெளிக்கொண்டுவரும் வகையில், தயாரிக்கப்பட்ட அந்த வானொலித் தொடர் ஓரளவிற்கு மலையக மக்களின் அவல நிலையில் பன்னாட்டளவிற்கு கொண்டு சென்றது என்று கருதலாம். அந்த தொடரின் வெற்றிக்கு எனது நீண்டகால நண்பரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கணிசமானளவில் உதவி செய்தார் என்பதையும் பதிவு செய்ய வேண்டும்.

வெளிநாட்டு ஊடகவியலாளர், அதிலும் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் இலங்கை வருவதற்கு விசா பெறுவதே சவாலாக இருந்த காலத்தில், அரசியல் அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு இடையே களத்தில் ஒலிப்பதிவு செய்வது மிகவும் சவாலானதாக இருந்தது. அவ்வகையில் "அரசு இடைஞ்சல்களை நான் கவனித்து கொள்கிறேன், களப்பதிவுகளை நீங்கள் கவனியுங்கள்" என்று கூறி உடனிருந்து ஒத்துழைப்பு அளித்தவர் மனோ கணேசன். தொலைதூர தோட்டப் பகுதிகளுக்குச் சென்று அச்சமின்றி மக்களைச் சந்திக்க அவர் பாரிய பங்களிப்பு செய்தார். மேலும், அந்த ஒலிப்பதிவில் மக்கள் கூறிய பிரச்சனைகளை நாடாளுமன்றத்தில் எழுப்பி, சில வி'யங்களுக்கு தீர்வும் பெற்றுத்தந்தார்.

இலங்கையின் இலக்கிய, சமூக, அரசியல் ஆளுமைகளில் தவிர்க்கப்பட முடியாத முக்கியமான சில தமிழ் படைப்பாளிகளில் ஐயா மு சி ஒருவர். அவரது படைப்புகள் குறித்து மேற்கோள் காட்டவே நான் "ஒப்பாரி கோச்சி" மற்றும் "பஞ்சம் பிழைக்க வந்த சீமையை" தொட்டுள்ளேன். அவரது சிறப்பு மிக்க படைப்புகளின் பட்டியல் நீளும்.

அவரது "வெந்து தணிந்தது காலம், தேயிலை தேசம், ஒரு விதை நெல்" போன்றவைகளும், மலையக நாட்டுப்புற பாடல்கள் குறித்த படைப்பும், உலகத் தமிழ் இலக்கியங்களின் ஒரு பங்காக எக்காலத்திற்கும் நிற்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் உலகின் இலக்கிய ஆளுமை குறித்து பேசப்படும் போதும், ஆவணப்படுத்தபடும் போது, இலங்கையிலிருந்து இரு ஆளுமைகள் அதில் இடம்பெறுவார்கள் அல்லது இடம்பெற வேண்டும் என்று நான் ஆழமாக எண்ணுகிறேன். ஒருவர் ஈழத் தமிழர் அப்பாதுரை முத்துலிங்கம் மற்றவர் இந்திய வம்சாவளி தமிழரான மு சிவலிங்கம்.

அமரத்துவம் வாய்ந்த அவரது படைப்புகள், அயராத அவரது சமூக, கலைப் பணிகள் காலத்தால் அழியாதவை.

அவரது படைப்புகள் உலகின் பல மொழிகளில் வெளிவர வேண்டும், அவரது சில படைப்புகளை பன்னாட்டுப் பெருநிறுவனம் ஒன்று ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது ஆறுதல் அளிக்கிறது. இருந்தாலும் இலங்கை பெருந்தோட்ட இந்திய வம்சாவளி மக்களின் சோகம் மிகுந்த வாழ்க்கை வரலாறு உலகெங்கும் பேசப்பட வேண்டும். அதற்கு அவரது பங்களிப்புகள் மேலும் வலு சேர்க்கும் என்று நான் நம்புகிறேன்.

# கனடா ஒன்ராறியோ மாகாணத்தின் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிக்கு 30 மில்லியன் டொலரை அரசாங்கம் முதலீடு செய்கிறது!

**மாகாண செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டு இணை அமைச்சர் விஜய் தணிகாசலமும், ஒன்றாரியோவின் பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்க மற்றும் வர்த்தக அமைச்சருமான விக் ∴பெடெலியும் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.**



ஒன்ராறியோவின் தொழில்துறைகளில் செயற்கை நுண்ணறிவின் பொறுப்பான பயன்பாட்டை விரிவுபடுத்தவும், எதிர்கால வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், வெக்டர் எனப்படும் தனியார் நிறுவனத்திற்கு 30 மில்லியன் டொலர் முதலீட்டை மாநில அரசு அறிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டுக்கான இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்களும், ஒன்ராறியோ அமைச்சரவையின் தலைவரும் பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வர்த்தக அமைச்சருமான விக் ∴பெடெலி அவர்களும் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

இந்த முதலீட்டின் மூலம், ஒன்ராறியோ நிறுவனங்கள் உலகத் தரமிக்க செயற்கை நுண்ணறிவுப் பொறியியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து செயற்பட முடியும். இதனால் புதிய தொழில்நுட்பங்களைப் பொறுப்புடன் நடைமுறைப்படுத்தவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், உலகச் சந்தையில் போட்டியிடவும் வாய்ப்பு உருவாகும்.

ஒன்ராறியோவில் தற்போது 1,600க்கும் மேற்பட்ட செயற்கை நுண்ணறிவு நிறுவனங்களும் சுமார் 30,000 வேலைவாய்ப்புகளும் உள்ளன. இத்தொழில்நுட்பத்தின் பயன்பாடு 2035ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தின் பொருளாதாரத்தில் 122 பில்லியன் டொலர் வளர்ச்சியை ஏற்படுத்துவதுடன், ஆண்டுதோறும் சராசரியாக 17,600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை நடைமுறை வணிகப் பயன்பாடுகளாக மாற்றி, உள்ளூர் திறமையாளர்களையும் நிறுவனங்களையும் வளர்ப்பதே இந்த முதலீட்டின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் செயற்கை நுண்ணறிவு உருவாக்கும் வேலைவாய்ப்புகளும் பொருளாதாரப் பயன்களும் ஒன்ராறியோவிலேயே நிலைத்திருப்பதுடன், உலகளாவிய தொழில்நுட்பத் துறையில் மாநிலத்தின் முன்னணி நிலையும் மேலும் வலுப்பெறும்.

***- UTHAYAN LJI Journalist Ganesh -***

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் உப்புக்குளத்தில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு



(01-10-2026)

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் 1ம் திகதி அன்று வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் உப்புக்குளம் சன சமூக நிலையத்தில் இடம்பெற்றது.

மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் என்.நகுசீன் ஏற்பாட்டில், ஃபா லங்கா பவுண்டேஷன் (FAA LANKA FOUNDATION) பணிப்பாளர் M.H.M பாஹிம் தலைமையில் இடம்பெற்ற குறித்த சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வில் விருந்தினராக மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் கலந்து கொண்டார்.

மேலும் மன்னார் பொலிஸ் நிலைய பெண்கள், சிறுவர் பிரிவு அதிகாரி உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டிருந்தனர்.



இதன் போது சிறுவர்களின் நிகழ்வுகள் இடம் பெற்றதோடு கலந்து கொண்ட சிறுவர்கள் மற்றும் முதியவர்களுக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வின் போது மன்னார் உப்புக்குளம் கிராமத்தைச் சேர்ந்த மூன்று சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த மன்னார் அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையில் கல்வி கற்று உயர் தரத்தில் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவி முஹமட் ரிஸா இஸ்ரதானு, 2026 நடைபெற்ற G.C.E O/L பரீட்சையில் 9A பெற்ற சித்திவிநாயகர் இந்து கல்லூரி மாணவன் M.R.M. நியாஸ் மபாஸ் பளு தூக்கும் போட்டியில் 2026 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தை பெற்ற அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை மாணவர் J. இனாமுல் ஹஸன் ஆகிய மூவரும் கௌரவிக்கப்பட்ட மை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக இந்திய மீனவர்கள் முன்னெடுக்கும் மீன்பிடி நடவடிக்கைகளை நிறுத்தினால் பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும்!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம். ஆலம்

- எஸ்.ஆர்.லெம்பேட் (01-10-2026)

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக முன்னெடுத்து வருகின்ற மீன்பிடி நடவடிக்கைகளை முற்று முழுதாக நிராகரிக்கிற அல்லது நிறுத்துகின்ற செயற்பாட்டில் அவர்கள் ஈடுபட்டால் மாத்திரம் அதிகாரிகளுக்கு இடையில் இடம் பெறுகின்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும். அல்லது அவர்கள் தொடர்ந்தும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பேச்சு வார்த்தைகள் எவ்விதத்திலும் வெற்றியளிக்காது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 1ம் திகதி அன்று வியாழன் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்கள் அதிகாரி மட்டத்திலான பேச்சு என்று பல தடவைகள் போடப்பட்டிருந்த போதிலும், இன்று வரை அதற்கான எந்தவிதமான முன் ஆயத்தங்களும் நடைபெற்றதாக இல்லை.

குறிப்பாக இந்த மீனவர்களை ஏமாற்றுகின்ற அல்லது மீனவர்களின் அந்த மீன்பிடியை தொடர்ந்து இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் மீன் பிடிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த கூடிய வகையில் தான் அமைச்சரின் கருத்துக்கள் அண்மையில் நாங்கள் பார்க்க கூடியதாக இருந்தது.

அதிகாரி மட்டத்திலான பேச்சுவார்த்தை என்று ஒரு திகதி நிர்ணயிக்கப்பட்டு, அது இந்திய தரப்பால் வேறொரு திகதியாக மாற்றப்பட்டது என்று கூறப்பட்டாலும், இன்று வரை அதற்கான எந்தவிதமான முன் ஆயத்தங்கள், அதற்கான திகதி நிர்ணயிக்கப் படாமல் கால நீடிப்பாக இது இழுத்துச் செல்லப்படுகின்றது.

நாங்கள் எதிர்பார்ப்பது பேச்சுவார்த்தை என்பது இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி வந்து சட்டவிரோத மீன் பிடியை முற்று முழுதாக நிராகரிக்கிற அல்லது நிறுத்துகின்ற செயற்பாட்டில் அவர்கள் உடன்பட்டாலே ஒழிய அந்த பேச்சுவார்த்தை வெற்றியளிக்காது என்பது எமது கருத்தாகும்.

இருந்தபோதிலும், ஒரு சுமூகமான நிலையை எட்டுவதற்கு நாங்கள் ஒரு பேச்சுவார்த்தையை முன் ஆயத்த ஏற்பாடுகளை நாங்கள் வரவேற்றிருந்த போதிலும், இன்று வரை அதற்கான திகதி நிர்ணயிக்கப் படாமல் ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது.

எனவே இந்த காலத்தை ஏப்ரல் மாதம் அவர்களின் தடைக்காலம் வரும் வரைக்கும் அதாவது ஏப்ரலில் இருந்து ஜூன் வரைக்கும் அவர்களின் அந்த தடைக்காலத்தை பயன்படுத்தக்கூடிய வகையில் காலத்தை இழுத்தடித்து, அந்த காலம் வரையும் அவர்கள் எமது கடலில் மீன்பிடிக்க கூடியவாறு, அதேபோன்று எமது மீனவர்களின் அன்றாட வாழ்வாதாரத்தை அழிக்கும் செயற்பாடுகளும், அவர்களின் மீன்பிடி வலைகள் ஏனைய உபகரணங்களை சேதமாக்குகின்ற செயற்பாடுகளும் தொடர்ந்து நடந்த வண்ணமே இருக்கிறது.

மீனவர்கள் தாங்களின் நிலையை எவ்வாறாயினும் வெளிப்படுத்தியும், அதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் அல்லது எந்தவிதமான இழப்பீடுகள் அவர்களுக்கு வழங்கப் படாத சூழ்நிலைதான் இப்போது காணப்படுகிறது. எனவே இந்திய மீனவர்கள் விடயத்தில் இலங்கை அரசு மெத்தனப் போக்கோடு செயல்படுகின்றது என்பதும் தெளிவாக எங்களுக்கு தெரிகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை, இந்திய அரசு தமிழக அரசாக இருக்கட்டும் அல்லது மத்தியிலே இருக்கின்ற இந்திய அரசாக இருக்கட்டும் அவர்களின் நிலைப்பாடு எமது கடற்பரப்பில் மீன்பிடிக்க கூடியவாறு தங்கள் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக அண்மையில் கூட பலவிதமான ஆசை வார்த்தைகளும், அதேபோன்று சில நிவாரணங்களை மேலதிகமாக கூட்டி கொடுத்து பல விடயங்களை அவர்கள் செய்திருக்கிறார்கள்.

தமிழக அரசுக்கு ஒரு பொறுப்பிருக்கிறது. இந்த தொழில் முறையை மாற்ற கூடிய வகையில் அங்கு சட்டத்தில் இருக்கின்றது.

70 சதவீதமான நிதியை மானியமாகவும், 20 சதவீதமான நிதியை இலவசமாகவும் வழங்கி அந்த மீனவர்களை மாற்றுத் தொழிலுக்கு உருவாக்க வேண்டும் என்று அவர்களாகவே உருவாக்கிக்கொண்ட செயற்பாடுகள் அங்கு நடைமுறையில் இருந்தாலும் கூட, அதனை ஊக்கவிக்காமல் இந்த ட்ரோலர் முறையையும் இந்த இழுவைமடி தொழிலையும் ஊக்குவிக்கின்ற வகையிலே, கைது செய்யப்படுகின்ற மீனவர்களுக்கும் அதேபோன்று தொழிலை இழக்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு வருவாய் இழப்பீட்டை கொடுத்து வருகிறார்கள்.

எனவே தமிழக அரசு நிர்வாக கட்டமைப்பில் கூறப்பட்டவாறு அந்த நடவடிக்கையை மேற்கொண்டால், இருதரப்பு மீனவர்களுக்குமான ஒரு சுமூகமான நிலை எட்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.இதற்கப்பால், இன்று மாவட்டம் மாவட்டமாக பல்வேறுபட்ட மீன்பிடி முறைகளால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக இலங்கை அரசினால் தடை செய்யப்பட்டு இருக்கின்ற மீன்பிடி முறைகள் தாராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.அதற்கப்பால் மீன்பிடி ஒழுங்குபடுத்தல் அதாவது அனுமதிக்கப் பட்டும் ஒழுங்குபடுத்தாத வகையில் மீன்பிடி நடைமுறைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதனை ஒழுங்குபடுத்தினால் கூட, அந்த மீனவர்கள் அந்த தொழிலில் உள்வாங்கப்படும் போது அல்லது நடைமுறையை அவர்கள் பின்பற்றி செய்யக்கூடியதாக இருக்கும்.

குறிப்பாக நாங்கள் எடுத்துக் கொண்டால், இப்போது மன்னார் மாவட்டத்தில் பரவலாக பேசப்பட்டுகின்ற சுருக்குவலை தொடர்பாக, இந்த சுருக்கு வலை தொடர்பாக ஏற்கனவே 2024 காலப்பகுதிக்கு முற்பட்ட காலத்தில் மன்னாரில் 74 மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.அதன்பின்னர் 2025 இல் அது 45 ஆக குறைக்கப்பட்டு, 2026 இல் அது 30 ஆக மட்டுப் படுத்தப்பட்டிருக்கின்றது. அதாவது சுருக்குவலை என்பது தடுக்கப்பட்ட ஒரு தொழில்முறை.

எனவே அந்த தொழில்முறையை ஓரளவு முன்னே காலங்களில் தொடர்ந்து செய்கின்றவர்களை மாற்றக்கூடிய வகையில், காலத்துக்கு காலம் அந்த எண்ணிக்கையை குறைத்து ஒரு காலத்தில் அதை இல்லாமலாக்கும் செயற்பாட்டில் அரசு முனைப்பாக செயல்படுவது வரவேற்கப் பட்டிருந்தாலும், இன்று அரசு அந்த செயற்பாட்டிலே மீனவர்களைக் கொண்டு ஒரு மோதலை உருவாக்கக்கூடிய அல்லது மீனவர்களுக்கு ஒரு தெளிவற்ற தன்மையை உருவாக்கி, அந்த தொழில் முறையை செய்து கொண்டிருப்பவர்களும் அதற்காக விண்ணப்பித்தவர் களையும் அலக்கழிக்கின்ற செயற்பாட்டை நாங்கள் பார்க்கின்றோம்.

மன்னாரில் கடந்த மாதம் நடைபெற்ற மீனவர் அபிவிருத்திக் கூட்டத்தில் இது தொடர்பாக மீனவர்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டு, அமைச்சரும் ஒரு வார காலத்திற்குள் அதற்கான தீர்வை தான் வழங்குவதாக தெரிவித்திருந்தார்.

அது பல அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இருந்தபோதிலும் ஒரு மாதம் கடந்த நிலையிலும் கூட இன்று வரை அது செயற்பாட்டிற்கு வரவில்லை. எனவே மீனவர்கள் அந்த விடயத்திலே சற்று குழப்பமடைந்துள்ளனர்.என அவர் மேலும் தெரிவித்தார்.

கனடிய செய்திகள்
Canadian News

## Former Toronto Mayor John Tory endorses Han Dong for Scarborough North ward of the Toronto City Council

# ரொறன்ரோ நகர சபை தேர்தலில் ஸ்கார்பரோ வடக்கு வேட்பாளர் ஹான் டோங்இற்கு நகரின் முன்னாள் மேயர் ஜோன் டோரி தனது ஆதரவை வழங்கியுள்ளார்

ரொறன்ரோ நகர சபைக்கான தேர்தலில் ஸ்கார்பரோ வடக்கு வட்டாரத்திற்கான வேட்பாளர் ஹான் டோங் அவர்களுக்கு ரொறன்ரோவின் முன்னாள் மேயர் ஜோன் டோரி தனது ஆதரவை வழங்கியுள்ளார்.

இந்தச் செய்தியானது தற்போது அனைத்து தரப்பினர் மத்தியில் மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. வேட்பாளர் ஹான் டாங் அவர்களின் ஆதரவாளர்களும் ரொறன்ரோவின் முன்னாள் மேயர் ஜோன் டோரி அவர்களின் இந்த ஆதரவிற்கு நன்றி தெரிவித்துள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.*- UTHAYAN LJI Journalist Ganesh -*

Han Dong



FOR IMMEDIATE RELEASE — Thursday, October 1, 2026

**Former Mayor John Tory endorses Han Dong for Scarborough North**

*Former Mayor John Tory: "Han Dong does the plain hard work." Endorsement released alongside Dong's 100-Day Pledge: six commitments, each with a first-100-days deadline.*

**SCARBOROUGH, ON** – John Tory, Mayor of Toronto from 2014 to 2023, has endorsed Han Dong for City Councillor in Ward 23, Scarborough North. The two worked together during Dong's years at Queen's Park and in Ottawa.

Scarborough North gave Tory 64.9 per cent of its vote in 2022, above his 62 per cent citywide. He endorsed former-Councillor Cynthia Lai in Scarborough North that year.

**John Tory, Mayor of Toronto, 2014–2023**

> *"As Mayor I saw which Councillors actually delivered for their streets — the ones who did the plain hard work and didn't look for credit. I worked with Han Dong during his time in Queen's Park and Ottawa, and I know that is how he works. Scarborough North needs safer crossings, buses that arrive on time, and a Councillor who returns calls and e-mails. Han will fight for Scarborough North. I'm supporting him."*




# அநுர அரசின் அடக்கு முறையா ...? தமிழ் தரப்புகளின் அதிகாரப் போட்டியா?

***"இனவாத அரசு இயந்திரம் தமிழர்களின் நினைவேந்தல் உரிமைகளைப் பறிக்கக் காத்திருக்கிறது என்பதை அறிந்திருந்தும், அதற்குத் தாம்பாளத் தட்டில் வாய்ப்பை வழங்கிய தமிழ் தலைமைகளின் அரசியல் சுயநலமே தியாகதீபம் திலீபனின் சிலை அகற்றப்பட பிரதான காரணம். திலீபனின் சிலை அகற்றம் வெறும் அநுரகுமார அரசாங்கத்தினதோ பொலிஸாரினதோ அடக்குமுறை மட்டுமல்ல. அது தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவுபட்ட அரசியலுக்குக் கிடைத்த வரலாற்றுச் சவுக்கடி. தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் திலீபனின் நினைவிடத்தை வலுக்கட்டாயமாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதனால் திலீபன் மீது மரியாதையை கொண்டிருந்தாலும் இவர்களின் அரசியல் எதிராளிகள் யாருமே திலீபனுக்கு அஞ்சலி செலுத்த அங்கு செல்வது இல்லை. கடந்த 2025 ஆம் ஆண்டு தியாகதீபம் திலீபனின் நினைவு தினத்தின்போதும் அமைச்சர் சந்திரசேகரும் அவரது குழுவினரும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தவந்த போது அஞ்சலி செலுத்தவிடாது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் தடுக்கப்பட்டு விரட்டப்பட்டனர்."***

----------------------------------------------------------------- **கே.பாலா -**

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் என்பது தமிழ் மக்களின் வரலாற்றுச் சுவடுகளுடனும், கூட்டு நினைவேந்தலுடனும் பிணைந்த ஒரு புனித நிகழ்வு. இவ்வாறான நிலையில் யாழ். நல்லூர் வீதி தியாக தீபம் திலீபன் நினைவாலயத்தில் வைக்கப்பட்ட அவரது உருவச்சிலை, அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் பொலிஸாரால் அகற்றப்பட்ட செய்தி தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியதில் வியப்பில்லை. ஆனால், இந்த திலீபனின் உருவச் சிலை அகற்றலின் பின்னணியில் இருந்தது வெறும் அரச ஒடுக்குமுறை மட்டும் தானா அல்லது தமிழ் தேசிய அரசியலில் தனக்கே உரித்தான ஆதிக்கத்தை, வாக்கு வங்கியை நிலை நிறுத்தத் துடிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் உள்வீட்டுப் பகையா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

தமிழ் தேசிய அரசியலில் தியாகங்கள் போற்றப்படுவதை விடவும், அவை சுய அரசியல் லாபங்களுக்காகக் கையகப்படுத்தப்படுவதே வரலாற்றுச் சோகமாக தொடர்கிறது. இதனை மீண்டும் நிரூபிக்கும் வகையிலேயே சி.வி.கே சிவஞானம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக்கட்சியும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். மாநகரசபையும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் திலீபனின் தியாகத்திற்குத் தாங்களே "ஒரே உரிமையாளர்கள்" எனக் காட்டிக்கொள்ள நடத்தும் அதிகாரப் போட்டியும், நிழல் யுத்தமுமே திலீபனின் உருவச் சிலையை அகற்றும் துணிவை பொலிஸாருக்கு வழங்கியது என்ற குற்றச்சாட்டையும் மறுக்க முடியாத சூழலே யாழ் மண்ணில் காணப்படுகின்றது.

திலீபனின் நினைவேந்தலைப் பொறுத்த வரையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் திலீபனை உரிமை கொண்டாடி அடாவடி அரசியல் செய்கின்றனர். தமிழ் தேசியக்கூட்டமைப்பினரே திலீபன் நினைவுத்தூபியை நிர்மாணித்து பராமரித்தவர்கள். ஆனால் வீட்டிற்குள் ஒட்டகம் புகுந்தது போல் புகுந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இன்று அங்குள்ளவர்களை எல்லாம் விரட்டிவிட்டு திலீபனின் நினைவுத்தூபி இடத்தை சர்வாதிகாரமாக தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொண்டு தமிழ் தேசத்தை மீட்க வந்தவர்கள் போல் காட்டி அரசியல் செய்கின்றனர் என்பதே கடந்த சில வருடங்களாக தொடரும் குற்றச்சாட்டு.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் திலீபனின் நினைவிடத்தை வலுக்கட்டாயமாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதனால் திலீபன் மீது மரியாதையை கொண்டிருந்தாலும் இவர்களின் அரசியல் எதிராளிகள் யாருமே திலீபனுக்கு அஞ்சலி செலுத்த அங்கு செல்வது இல்லை. கடந்த 2025 ஆம் ஆண்டு தியாகதீபம் திலீபனின் நினைவு தினத்தின்போதும் அமைச்சர் சந்திரசேகரும் அவரது குழுவினரும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தவந்த போது அஞ்சலி செலுத்தவிடாது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் தடுக்கப்பட்டு விரட்டப்பட்டனர்.

தமிழ் தேசத்திற்காக, தமிழ் மக்களுக்காக உயிர் நீத்த தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சர் அடங்கிய குழுவினரை அதிலும் அவர்கள் தமிழர்களாகவும் இருக்கும் நிலையில் அவர்களை அஞ்சலி செலுத்த விடாது தடுக்க, திருப்பியனுப்ப தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு என்ன உரிமையுள்ளது? திலீபன் அனைத்து தமிழர்களுக்கும் சொந்தமானவனாக இருக்கையில் திலீபனை உரிமை கொண்டாட தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் யார்? இவர்களுக்கு அந்த உரிமையை கொடுத்தது யார்? இவர்களுக்கும் திலீபனுக்கும் என்ன தொடர்பு? திலீபனுக்கு அஞ்சலி செலுத்த யார் வரலாம் யார் வரக்கூடாது என்பதனை தீர்மானிக்க இவர்கள் யார்? என்ற கேள்விகள் தமிழ் மக்கள் மத்தியில் அப்போது எழுந்தன. தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மீதான கடும் விமர்சனமாகவும் அது மாறியது.

கடந்த வருடத்தைப்போலவே இவ்வருடமும் தியாக தீபம் திலீபனின் நினைவுதினம் அவர் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த நல்லூர் வீதியில் அனுஸ்டிக்கப்பட்டது. வழமை போன்றே இவ்வருடமும் திலீபனின் நினைவிடத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அத்துடன் அங்கு திலீபனின் உருவச்சிலையும் இம்முறை வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த சிலையை அகற்ற பொலிஸார் நீதிமன்றத்தை நாடியபோது இதில் நீதிமன்றம் தலையிடாது. பொலிஸார் தமது அதிகாரத்திற்குட்பட்டு நடவடிக்கை எடுக்க முடியுமென நீதிமன்றம் அறிவித்தது. திலீபனின் நினைவுதினம் முடியும்வரை பொறுமை காத்த பொலிஸார் அது முடிந்த மறுநாள் அதிகாலையே திலீபனின் சிலையை அங்கிருந்து அகற்றிச் சென்று விட்டனர்.

தியாகதீபம் திலீபனின் சிலை பொலிஸாரால் அகற்றப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய நிலையில் திலீபனின் சிலை பொலிஸாரால் பலவந்தமாக அகற்றப்பட்ட சம்பவத்தின் பின்னணியிலும், இந்த சதியிலும் சி.வி.கே. சிவஞானம் தலைமையிலான தமிழரசுக்கட்சிக்கு நேரடியாகத் தொடர்புள்ளது. நினைவேந்தல் நிகழ்வின் போது ஒலிபெருக்கி பயன்பாட்டிற்கான அனுமதியைக் கோருவது தொடர்பில் சி.வி.கே. சிவஞானத்துடன் உரையாடிய போது, அவர் மிகவும் காட்டமான தொனியில், "யாரைக் கேட்டு இந்த சிலையை வைத்தீர்கள்? செப்டம்பர் 26ஆம் திகதியோடு இந்த சிலையை எடுக்காவிட்டால் நானே இந்த சிலையை அகற்றுவேன்" என்று எச்சரித்தார். தமிழரசுக்கட்சியும் அதன் தலைமையும் அரசாங்கத்திற்கும் பொலிஸாருக்கும் "கைக்கூலிகளாக" நின்று இந்தச் செயலுக்கு உடந்தையாக இருந்ததாக தமிழ் தேசியமக்கள் முன்னணியின் செயலாளரும் முன்னாள் எம்.பி.யுமான கஜேந்திரன் பகிரங்கமாக குற்றம்சாட்டியதன் மூலம் திலீபனை வைத்து அரசியல் செய்யும் ஒரு அசிங்க அரசியல் மீண்டும் வெளிப்பட்டது.

ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி செயலாளரின் இந்த குற்றச்சாட்டை உடனடியாகவே மறுத்த தமிழரசுக்கட்சியின் தலைவர் சி.வி. கே.சிவஞானம் பல உண்மைகளையும் போட்டுடைத்துள்ளதுடன் திலீபனை வைத்து சிலர் செய்யும் அரசிங்க அரசியலையும் வெளிப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் கூறுகையில், தியாக தீபம் திலீபனின் சிலைக்கு எதிரான ஓர் ஆள் நானாகத்தான் இருக்க வேண்டும் எனச் சித்திரிப்பது தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் திட்டமிட்டசெயல். இது என் மீது மட்டுமல்ல, இலங்கைத் தமிழரசுக்கட்சியையும் திட்டமிட்டுக் களங்கப்படுத்துகின்ற செயல். நானும் தமிழரசுக் கட்சியும் இந்தச் சிலை வைப்புக்கு எதிரானவர்கள் என்றும் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு நாங்கள் துணைபோனோம் அல்லது எங்கள் கோரிக்கைக்கு அமையவேபொலிஸார் நடவடிக்கை எடுத்தார்கள் என்றும் அபாண்டமான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

திலீபனின் சிலையைப் பொலிஸார் அகற்றியமைக்கும் எங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. பொலிஸார் யாழ். மாநகர மேயரிடம் நீங்கள் சிலையை அகற்றுவீர்களா எனக் கேட்டபோது மாநகர மேயர் நாங்கள் அகற்றமாட்டோம் என்றே தெரிவித்தார். கடந்த 2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்தத் தூபியைச் சுற்றிப்பாதுகாப்பு வேலி அமைத்து 10 அடிசுற்றளவுக்கு அதனைத் திருத்தி அமைக்கலாம் என்ற கோரிக்கையை நான்தான் அப்போதைய வடக்கு மாகாண முதலமைச்சருக்கு முன் வைத்தேன். அப்படிப்பட்ட எனக்கு இந்தச் சிலை வைப்பை எதிர்க்க வேண்டிய தேவை இல்லை. எமது கட்சியும் எதிர்க்க வேண்டிய அவசியமும் இல்லை. தியாகி திலீபன் நினைவேந்தலுக்கு நாங்கள் மாறானவர்கள் என்று சித்திரிப்பது நியாயத்துக்கு அப்பாற்பட்டது.

மேலும் 2015ஆம் ஆண்டில் முதலாவதாக அந்த இடத்தைத் துப்புரவுசெய்து நிகழ்வை நடத்தியது ஜனநாயகப்போராளிகள் கட்சி. 2016ஆம் ஆண்டிலும் அவர்கள்தான் செய்தனர். அவர்களுக்கு அந்த உதவியைச் செய்தவன் நான்தான். ஆனால், இன்று தமிழரசுக் கட்சியை அழிப்பதே தங்களதுநோக்கம் என்று கூறிக்கொண்டு திலீபன் நினைவேந்தலையும் தங்களது சுயநல அரசியலுக்காகத் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணி பயன்படுத்தி வருகின்றது. திலீபன் தியாக வேள்வியில் ஆகுதியானவன் என்பது எல்லோருக்கும் தெரியும் அவரைக் கொண்டாடுவது அனைவருக்கும் திருப்தியான விடயம்.

ஆனால் தாங்கள்தான் எல்லாம் செய்யலாம், தங்களது கட்சிதான் அதற்கு ஏகபோகக் குத்தகைதாரர்கள், தாங்கள்தான் "புலி வாரிசுகள்" என்றவாறாகவே தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் நடந்து கொள்கின்றனர். தாமாகவே பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு திலீபன் நினைவஞ்சலிக் குழுவே அங்குள்ளது. அதில் தமிழரசுக் கட்சி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்ற ஏனைய தமிழ்க் கட்சிகள் இடம்பெற வில்லையே ஏன்? 2015, 2016, 2017 காலப்பகுதிகளில் இந்த நிகழ்வுகளை முன்னெடுத்த ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட இன்று அந்த இடத்துக்கு வரவில்லை. உங்களோடு முரண்படக் கூடாது என்பதற்காகவும் திலீபனின் தியாகம் கொச்சைப்படுத்தப்படக் கூடாது என்பதற்காகவுமே நாங்கள் ஒதுங்கிப்போய் "நீங்களே செய்யுங்கள்" என்று விட்டுவிட்டோம். ஆனால் அதையே சாதகமாகப் பயன்படுத்தி எங்களை இகழ்ந்து தரம் தாழ்ந்த செயல்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஈடுபடுவதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். நாங்கள் தேசியத்தின் அடிப்படையைக் காவிக் கொண்டிருப்பவர்கள். இத்தகைய சின்னத்தனமான அரசியலை எக்காலத்திலும் செய்ய மாட்டோம் என்று பதிலடி கொடுத்துள்ளார்.

**(தொடர்ச்சி 19 பக்கம்)**



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் மீதான அவதூறு வழக்கில் மன்னிப்புக் கோர உத்தரவிட்ட நீதிமன்றம்




## தவணை கோரிய குற்றவாளி ஜனகன் விநாயகமூர்த்தி!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ரட்ணம் செந்தில்மாறனுக்கு எதிராக, வி.ஜனகனினால் சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்பட்ட உண்மைக்குப் புறம்பான பதிவுகளுக்கு எதிராக, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு 29.09.2026 (செவ்வாய்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாகத் தன் சமூக வலைத்தளத்தில் பகிர்ந்த காணொளியை எதிர்மனுதாரரான ஜனகன் விநாயகமூர்த்தி நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, இரு தரப்பினருக்கும் இடையில் சமரசமான அணுகுமுறையை ஏற்படுத்துவது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக, வழக்கு விசாரணையை எதிர்வரும் அக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

முன்னதாக, "யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் சைவ சமய அடையாளங்களைப் பள்ளி வளாகத்திலிருந்து அழித்து அகற்றுகின்றார். அவர் மத நம்பிக்கையற்றவர். பாடசாலையின் பாரம்பரியத்தை நிராகரிக்கின்றார்" என்று குற்றம்சாட்டி ஜனகன் விநாயகமூர்த்தியினால் முகநூலில் காணொளியொன்று வெளியிடப்பட்டிருந்தது.

இக்காணொளியை உடனடியாக நீக்குமாறும், இது தொடர்பாக அதிபரிடம் மன்னிப்புக் கோருமாறும், எதிர்காலத்தில் இதுபோன்ற காணொளிகளை வெளியிடமாட்டேன் என உத்தரவாதம் அளிக்குமாறும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றம் நிபந்தனைக் கட்டளை பிறப்பித்திருந்தது.

29.09.2026 அன்றைய வழக்கு விசாரணையின்போது நீதிமன்றில் நேரில் முன்னிலையான ஜனகன் விநாயகமூர்த்தி, நீதிமன்ற உத்தரவிற்கு இணங்கி அக்காணொளியை ஏற்கனவே நீக்கிவிட்டதாகத் தெரிவித்தார்.

மேலும், காரணங்கட்டுவதற்காக அவகாசம் கோரிய அவர், அதிபரிடம் மன்னிப்புக் கோருவது உள்ளிட்ட விடயங்களில் இரு தரப்பும் ஓர் இணக்கமான முடிவை எட்டுவதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இரு தரப்பின் கோரிக்கையையும் ஏற்றுக்கொண்ட நீதிவான், சமரச முயற்சியை மேற்கொள்வதற்காக வழக்கை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ரட்ணம் செந்தில்மாறன் சார்பாக மூத்த சட்டத்தரணிகளான வி.திருக்குமரன், கலாநிதி கு.குருபரன் ஆகியோருடன் மேலும் 12 சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

வி.ஜனகன் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர, என்.கே.அசோக்பரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

# நினைவேந்தலைத் தடுப்பது மாண்புக்கு எதிரான செயல் என யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவை கண்டனம்



- ந.லோகதயாளன்

யாழ். நல்லூரில் உள்ள தியாக தீபத்தின் நினைவாலயத்திலிருந்து தியாகி திலீபனின் சிலை அகற்றப்பட்டமைக்கு யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. அத்துடன் ஆன்மிக அடிப்படையில் நினைவேந்தலைத் தடுப்பதும் குழப்புவதும் உயிரிகளின் மாண்புக்கு எதிரானது என்றும் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "பேராசை, சர்வாதிகாரம், இனவாதம் மற்றும் மதவாதம் போன்றவை களையப்பட்டு, அஹிம்சை ரீதியான முன்னெடுப்புகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

வன்முறையைக் கடந்து வாழ்வை உறுதி செய்வதற்காகத் தனது உயிரைக் காணிக்கையாக்கிய திலீபனை மதிக்கின்றோம். அஹிம்சைக்காக ஆகுதியான அவரை அவமதிப்புக்கு உள்ளாக்கும் அனைத்து சக்திகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சமய நோக்கைக் கடந்து நினைவேந்தல் என்பது ஓர் அடிப்படை மனித உரிமை ஆகும். கலாசார வாழ்வில் பங்கேற்பதற்கான உரிமையை அனைவருக்கும் உத்தரவாதம் அளிக்கும் "பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின் 15ஆவது பிரிவில்" நினைவுகூரும் உரிமை வேரூன்றியுள்ளது.

வரையறைகளைப் புரிந்து, கட்டமைப்புகளை அறிந்து, பன்மைத்துவத்தை மதித்து, அனைவரும் தங்களது வரலாற்று அடையாளத்துடன் வாழ்வதைத் தடுப்பது மாண்பை நிராகரிப்பதாகும். அது ஆரோக்கியமானதல்ல.

மாண்பு, சமத்துவம் மற்றும் ஒற்றுமை போன்றவற்றை வலியுறுத்தும் மக்கள் அரசியலை இருட்டடிப்பு செய்யும் கட்சி அரசியல், தனது வரையறைக்குள் மாத்திரம் செயற்பட வேண்டும்.

ஆன்மிக அடிப்படையில் நினைவேந்தலைத் தடுப்பது, குழப்புவது மற்றும் எடுப்பார் கைப்பிள்ளையாக்க முனைவது உயிரிகளின் மாண்புக்கு எதிரானதாகும். எனவே, அகிம்சைவாதியான திலீபனுக்கு அவமானம் ஏற்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் கைவிட்டு, மக்கள் நினைவேந்தலை முன்னெடுக்க உரிய ஆரோக்கியமான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.

சினிமா நியூஸ்

# முதலமைச்சர் விஜய் "சிக்மா" திரைப்படத்தை பார்க்க வேண்டுமென கோரிக்கை வைத்துள்ள சந்தீப் கிஷன்



முதலமைச்சர் விஜய் "சிக்மா" திரைப்படத்தை பார்க்க வேண்டுமென நடிகர் சந்தீப் கிஷன் கோரிக்கை வைத்துள்ளார். தமிழக முதல மைச்சர் விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் முதல்முறையாக இயக்குநராக "சிக்மா" படத்தின் மூலம் அறிமுகமாகியுள்ளார். இப்படத்தை லைகா மற்றும் ஜேஎஸ்ஜே மீடியா நிறுவனம் இணைந்து தயாரித்துள்ளது.

இந்தப் படத்தில் சந்தீப் கிஷன் நாயகனாகவும் பரியா அப்துல்லா நாயகியாகவும் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு இசையமைப்பாளர் தமன் இசையமைத்துள்ளார். இப்படத்தில் ராஜு சுந்தரம், அன்புதாசன், யோக் ஜாபி, சம்பத் ராஜ், கிரண் கொண்டா, மகாலட்சுமி சுதர்சனன், ஷீலா ராஜ்குமார், கமலேஷ், கிரண் கொண்டா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். கேத்ரின் தெரசா ஒரு துள்ளலான பாடலில் சிறப்புத் தோற்றத்தில் தோன்றுகிறார்.

இந்த படம் வருகிற 2ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதற்கிடையில், இந்த படத்திலிருந்து "சிக்மா ஸ்டைல்", "அய்யய்யோ அம்மாடி", "ரேஜ் ஆப் சிக்மா", "சுலோச்சனா" ஆகிய பாடல்கள் வெளியாகி படத்தின் மீதான கவனத்தை ஈர்த்துள்ளன. குறிப்பாக "சுலோச்சனா" பாடலில் சிறப்புத் தோற்றத்தில் கேத்ரின் தெரசா நடனமாடியுள்ளார்.



# மோட்டார் சைக்கிள் விளையாட்டில் புதிய பயணத்தை தொடங்கியுள்ள நடிகர் கௌதம் ராம் கார்த்திக்

நடிகர் கௌதம் ராம் கார்த்திக் மோட்டார் சைக்கிள் விளையாட்டில் புதிய பயணத்தை தொடங்குகிறார். தமிழின் முன்னணி நடிகர் கௌதம் ராம் கார்த்திக்கிற்கு சினிமாவைத் தாண்டி விளையாட்டு மற்றும் பைக் ரைடிங்கில் அதிக ஆர்வம் இருந்து வருகிறது. குறிப்பாக, சமீப காலமாக மோட்டார் சைக்கிள் ரைடிங் அவரது வாழ்க்கையின் முக்கியமான ஒரு பகுதியாக மாறியுள்ளது. படப்பிடிப்புக்கு இடையே கிடைக்கும் நேரங்களில் பைக் ஓட்டுவது, பயிற்சி மேற்கொள்வது என தனது ஆர்வத்தை தீவிரமாக வளர்த்து வருகிறார். பைக் ஓட்டுவதை வெறும் பொழுதுபோக்காக பார்க்காமல், அதில் இருக்கும் நுணுக்கங்களைத் தெரிந்துகொண்டு, மோட்டார் ஸ்போர்ட்ஸில் தன்னை படிப்படியாக தயார்படுத்தி வருகிறார் கௌதம்.

மோட்டார் சைக்கிள் பந்தயங்களை தொடர்ந்து கவனித்து வரும் அவர், ஒவ்வொரு பயணத்தின் மூலமும் புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டு வருகிறார். திரைப்படப் படப்பிடிப்புகளின் பரபரப்பிலிருந்து சிறிது நேரம் விலகி, தனக்குப் பிடித்த விஷயத்தில் முழு கவனத்தையும் செலுத்துவது கௌதமுக்கு புதிய உற்சாகத்தை அளிக்கிறது. பைக் ரைடிங் மூலம் உடல் ரீதியாக மட்டுமல்லாமல், மனதளவிலும் தன்னை சவாலுக்கு உட்படுத்தி வருகிறார்.

அதே நேரத்தில், தனது பைக்கையும் அதன் செயல்பாடுகளையும் இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறார். இந்த ஆர்வத்தின் மற்றொரு பகுதியாக, தனது நெருங்கிய நண்பர்களுடன் இணைந்து ஒரு சிறிய ஆவணப்பட காணொளியை கௌதம் ராம் கார்த்திக் உருவாக்கியுள்ளார். இதில் அவரது மனதுக்கு நெருக்கமான பைக் "கோரா" முக்கிய இடம் பிடித்துள்ளது. கௌதம் மற்றும் அவரது நண்பர்களின் பைக் பயணம், அதற்கான தயாரிப்புகள், பயிற்சிகள் என பல்வேறு தருணங்களை இந்த காணொளி பதிவு செய்கிறது. குறிப்பாக, ஒரு ரைடருக்கும் அவரது பைக்கிற்கும் இடையே உருவாகும் அந்த நெருக்கத்தையும், பைக் மீதான கௌதமின் ஆர்வத்தையும் இந்த ஆவணப்படம் அழகாக வெளிப்படுத்துகிறது. திரையில் நடிகராக பார்க்கப்படும் கௌதம் ராம் கார்த்திக்கின் இன்னொரு பக்கத்தை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தும் விதமாகவும் இந்த காணொளி அமைந்துள்ளது. தனது ஆர்வத்தை வெறுமனே பொழுதுபோக்காக வைத்துக்கொள்ளாமல், அதை முறையாக கற்றுக்கொண்டு அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் பயணித்து வருகிறார். தொடர்ந்து திரைப்படப் பணிகளில் மும்மரமாக இருந்தாலும், கிடைக்கும் நேரத்தை மோட்டார் ஸ்போர்ட்ஸுக்காக ஒதுக்கி வரும் கௌதம், ஒரு இயக்குநராக தன்னை மேம்படுத்திக் கொள்ள தொடர்ந்து பயிற்சி செய்து வருகிறார். அந்த புதிய பயணத்தின் தொடக்கத்தைத்தான் தற்போது வெளியாகியுள்ள "கோரா" காணொளி பதிவு செய்கிறது.

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

---

வரலாறும் மரபும்: **1216**

---



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் புதுக்கல்லடி, மட்டக்களப்பு

இந்துமதத்திலே தோன்றிய முனிவர்களும், ஞானிகளும், அறிஞர்களும் காலத்திற்குக் காலம் பல்வேறு விதத்தில் மக்களிடையே ஒற்றுமையையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளனர். இந்த வரிசையில் மட்டக்களப்பு புதுக்கல்லடி ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தை, அமைத்த சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களும் இடம் பெறுகின்றார்கள். காலங் காலமாக நிலவும் மரபுகளை மீறி, இறைவனை வழிபட மரபுகளோ அன்றி வரன் முறையற்ற கட்டுப்பாடுகளோ அவசியமில்லை என்பதை சைவ மக்களுக்கு எடுத்தக் காட்டி, வழிகாட்டிய பெருமை சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களையே சாரும்.

சூழ்நிலை, காலம் இவற்றிற்கு ஏற்றவகையில் ஆலயத்தை அமைத்து, எவ்வித மரபுகளையும் பேணாது அன்பு ஒன்னையே மூலதனமாகக்கொண்டு, குடமுழுக்குச் செய்த காவி உடை தரித்த துறவிகள், இவ்வாலய வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்துள்ளனர். ஏனைய இந்து ஆலயங்களைப் போலன்றி, கருவறையின் வெளிவாசல்வரை சென்று முருகப்பெருமானைத் தரிச்கும் முறையை, மக்கள் தாம் பெற்ற பெரும்பேறாகக் கருதினர்.

இவ்வாறு நேர்முக தரிசனம் செய்யும் பக்தர்கள், செவ்வாய்க் கிழமைதோறும் எவ்வித கட்டணமுமின்றி, இலவசமாகவே உள்ளே சென்று நேர்முக தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றார்கள். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் நூற்றுக்கணக்கான பக்தர்கள், பல பாகங்களிலிருந்தும் இவ்வாலயத்திற்கு வருகை தந்து, முருகப்பெருமானைத் தரிசித்துச் செல்கின்றார்கள். கட்டணம் செலுத்தி நேர்முகதரிசனம் செய்ய இயலாதவர்களுக்காக இவ்வாறான அரிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கருவறைக்கு அண்மையில் சென்று தரிசனம் செய்வதென்பது, இந்து மரபுகளின்படி இயலாத விடயமாக அமைந்துள்ளது. பிராமணர்களும், சிவாச்சாரியார்களும் மட்டுமே இத்தகைய வாய்ப்பைப்பெறும்வகையில், இந்து மரபுகள் காணப்படுகின்றன. இவற்றிற்கு விதிவிலக்காக நேர்முகதரிசனம் செய்ய அனைத்து இந்துக்களுக்கும் வாய்பளிப்பதோடு, அவ்வாறானவர்களுக்கு, பத்து நிபந்தனைகள் விதிக்கப்பட்டு அதன் அடிப்படையிலேயே நேர்முக தரிசனத்திற்கு அனுமதி கிடைக்கின்றது. இவ்வாறான பத்து அறிவுறுத்தல்களும் கீழக்கண்டவாறு காணப்படுகின்றது.

1. பக்தர்கள் சாதி, மத, இன, பால் வேறுபாடின்றி கருவறை வாசல்படிவரை சென்று முருகனை நேர்முக தரிசனம் செய்யலாம்.

2. நேர்முக தரிசனத்திற்கு வருவோர் உடல், உள தூய்மையுடனும், ஆசாரத்துடனும் வரவேண்டும்.

3. தினமும் மூன்று காலப்பூசை நிறைவுபெற்ற பின்னர் நேர்முக தரிசனம் இடம்பெறும்.

4. நேர்முக தரிசனத்திற்குரிய அனுமதிப்பத்திரத்தை ஆலயத்தின் காரியாலயத்தில் பெற வேண்டும். பெற்ற பின்னர் வடக்கு வாசல் கதவின் முன்பு, வரிசையாக நிற்றல் வேண்டும்.

5. செவ்வாய்க்கிழமைதோறும் கட்டணம் எதுவுமின்றி இலவச தரிசனம் இடம்பெறும்.

6. அனுமதிப் பத்திரத்தை ஒவ்வொருவரும் தனித்தனியாக அவரவர் பெயரில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. விரும்பியோருக்கு கருவறை உள்ளேயும் அர்ச்சனை செய்து கொடுக்கப்படும்.

8. நேர்முகதரிசனத்திற்குச் செல்வோர் விரும்பினால், அர்ச்சனைத் தட்டுக்களையும் கொண்டு செல்லலாம்.

9. வடக்குவாசலால் உள்ளே சென்று நேர்முக தரிசனம் செய்துவிட்டு, தாமதியாது தெற்கு வாசலால் வெளியே செல்ல வேண்டும்.

10. நோயாளரும், கைக்குழந்தைகளும் நேர்முக தரிசனத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இவ்வாறு நேர்முக தரிசனத்திற்குரிய அறிவுறுத்தல்கள் காணப்படுகின்றன. இவ்வாறான அறிவுறுத்தல்கள் பக்தர்கள் சீரிய வழியிலே சென்று தரிசனம் செய்ய, பேருதவியாக அமைந்துள்ளது.

இவற்றோடு இவ்வாலயத்திலே இடம்பெற்ற அற்புதமொன்றினை நினைவு கூர்ந்து, வருடந்தோறும் இவ்வாலயத்திலே கண் திறந்த விழா சிறப்பாக நடைபெறுகின்றது. இவ் அற்புதம் ஆலய முகப்பிலுள்ள திருச்செந்தூர் முருகனின் ஓவியத்தோடு தொடர்புபட்டுக் காணப்படுகின்றது.

**வளரும்..**

*(17 பக்கத் தொடர்ச்சி)*

## *அநுர அரசின் அடக்கு முறையா ...? தமிழ் தரப்புகளின் அதிகாரப் போட்டியா?*

---

*நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த உருவச்சிலை பொலிஸாரால் அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக, யாழ். மாநகர முதல்வர் மதிவதனி கூறுகையில், திலீபனின் சிலை அகற்றப்பட்ட விவகாரத்தில் தமிழரசுக்கட்சி மற்றும் அதன் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் மீது தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் கஜேந்திரன் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் "திட்டமிட்ட சேறுபூசல்கள்", அரசியல் நோக்கம்கொண்டவை. திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்காக தற்காலிகமாகவே சிலை வைக்க அனுமதி கோரப்பட்டது. அதற்கு மாநகரசபையில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவோடு அனுமதி வழங்கப்பட்டது. செப்டம்பர் 26ஆம் திகதியுடன் நினைவேந்தல் நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னரும், சிலை தொடர்பில் ஏற்பாட்டாளர்களான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் உரிய கவனம் செலுத்தாததாலேயே, பொலிஸார் வந்து அதை அகற்றிச் சென்றுள்ளனர் சிலையை அகற்றுமாறு மாநகரசபை பொலிஸாரிடம் கோரவில்லை. பொலிஸாரின் இந்த நடவடிக்கையை நாமும் கண்டிக்கின்றோம் என்று கூறுகின்றார்.*

*தியாகதீபம் திலீபனின் சிலையை அகற்றிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை கண்டனத்திற்குரியது என்றாலும், இந்த நிலைமைக்குக் கதவு திறந்து வைத்தவர்களே பிரதான குற்றவாளிகள். திலீபனின் தியாகத்தை வைத்து அரசியல் செய்யத் துடிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு புறமும் தியாகதீபம் திலீபனின் நினைவிடத்திற்கு உரித்தானவர்களாகவுள்ள யாழ். மாநகரசபை நிர்வாகமும் அதனை தமது ஆட்சியில் வைத்துள்ள தமிழரசுக்கட்சி மறு புறமும், நடத்திய "பனிப்போரும்" பகையுமே, திலீபனின் சிலையை அகற்றும் சாதகமான சூழலை பொலிஸாருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது என்பதே உண்மை.*

*இனவாத அரசு இயந்திரம் தமிழர்களின் நினைவேந்தல் உரிமைகளைப் பறிக்கக் காத்திருக்கிறது என்பதை அறிந்திருந்தும், அதற்குத் தாம்பாளத் தட்டில் வாய்ப்பை வழங்கிய தமிழ் தலைமைகளின் அரசியல் சுயநலமே தியாகதீபம் திலீபனின் சிலை அகற்றப்பட பிரதான காரணம்.தியாக தீபம் திலீபனின் சிலை அகற்றம் என்பது வெறும் அநுரகுமார அரசாங்கத்தினதோ பொலிஸாரினதோ அடக்குமுறை மட்டுமல்ல. அது தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவுபட்ட அரசியலுக்குக் கிடைத்த வரலாற்றுச் சவுக்கடி. இலங்கைத் தமிழரசுக்கட்சியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தியாகங்களின் பெயரால் நடத்தும் இந்த அதிகாரப் பனிப்போரை உடனடியாக நிறுத்தாவிட்டால், எதிர்காலத்தில் தமிழர்களின் எந்தவொரு வரலாற்று நினைவும் எஞ்சியிருக்காது. தியாகிகளின் நினைவுகளைத் தங்களின் வாக்கு வங்கிச் சொத்தாகக் கருதுவதை விட்டுவிட்டு, பொது இலக்கை நோக்கித் தமிழ் தலைமைகள் ஒன்றிணையாத வரை, எதிரியின் கைகள் நமது புனிதக் குறியீடுகளை வீழ்த்திக்கொண்டேதான் இருக்கும்.*

---



# இவ்வார ராசிபலன்



ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்
ஸ்தாபகர்
ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
40.வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமாள் கோவில்ரயில் வேகேட் (வழி), வெங்கடாபுரம் (அஞ்சல்), செங்கல்பட்டு (மா)- 603204.
தொடர்புக்கு WhatsApp: +917788994666


## 02-10-2026 வெள்ளி தொடக்கம் 08-10-2026 வியாழன் வரையும்




**மேஷம்:** மேஷராசி அன்பர்களே! குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல்நலம் சீராகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரை யொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அவர்களைக் கண்டிக்காமல் அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய வேலைக்கு முயற்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகளும் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு பதவிஉயர்வும் ஊதியஉயர்வும் கிடைக்கும். இந்த வாரம் வீடு வாங்கும் யோகம் உண்டு. புதிய வீடு வாங்கவும், இடம் வாங்கவும், வீடு கட்டவும் இது மிகவும் உகந்த வாரம். வெள்ளிக்கிழமை (02.10.2026) அன்று வீடு சம்பந்தமான பத்திர வேலைகளை தொடங்கலாம். வங்கி கடன் எளிதில் கிடைக்கும். பரம்பரை சொத்து பிரச்சனைகள் உங்களுக்கு சாதகமாக முடியும். திருமண தடைகள் விலகும் வாரம். குரு பகவான் பார்வையால் திருமண யோகம் கைகூடும். சனிக்கிழமை (03.10.2026) மற்றும் திங்கட்கிழமை (05.10.2026) ஆகிய நாட்கள் பெண் பார்க்க, நிச்சயதார்த்தம் செய்ய மிகவும் நல்ல நாட்கள். காதல் திருமணம் பெரியவர்கள் சம்மதத்துடன் நடக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு | எண்: 9 | நாள்: செவ்வாய், வெள்ளி




**ரிஷபம்:** ரிஷபராசி அன்பர்களே! பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்வதன் மூலம் தேவையற்ற பிரச்னைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனக் கசப்புகள் விலகும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்டநாள்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருக்கும் வேலையில் இருந்து வேறு வேலைக்கு இப்போது முயற்சி செய்ய வேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். கடையை வேறு இடத்துக்கு மாற்றம் செய்வதையும் தவிர்க்கவும். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் உடல் அசதி உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை உற்சாகம் தருவதாக இருக்கும். சுக்கிரன் பலமாக இருப்பதால் வீட்டை அழகுபடுத்தும் வேலைகள், புதிய பொருட்கள் வாங்குவீர்கள். பழைய வீட்டை விற்று புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. சொத்து சம்பந்தமான ஆவண வேலைகளில் கவனம் தேவை. காதலிப்பவர்களுக்கு திருமணத்திற்கான பெற்றோர் சம்மதம் கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் இருந்த மந்த நிலை மாறும். கலை, அழகுக்கலை, கணினி துறை மாணவர்களுக்கு இந்த வாரம் சிறப்பான வாரம். நல்ல மதிப்பெண் கிடைக்கும். மேல்படிப்பிற்காக வெளிநாடு செல்லும் முயற்சி வெற்றி பெறும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, பச்சை | எண்: 6 | நாள்: வெள்ளி




**மிதுனம்:** மிதுனராசி அன்பர்களே! வார முற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். வாரப் பிற்பகுதியில் நீங்கள் நீண்டநாள்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விஷயத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாளாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் சுமூகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். வீடு மாற்றம், இடமாற்றம் ஏற்படும் வாரம். வாடகை வீட்டில் இருப்பவர்கள் சொந்த வீட்டிற்கு மாறும் யோகம் உண்டு. புதிய வீடு வாங்குவதற்கான கடன் முயற்சிகள் 02.10.2026 வெள்ளிக்கிழமை அன்று கைகூடும். பூர்வீக வீட்டில் பழுதுபார்க்கும் வேலைகள் நடக்கும். சகோதரர்களிடம் சொத்து பற்றி பேசும் போது விட்டுக்கொடுத்து செல்லவும். மாணவர்களுக்கு இது அபாரமான வாரம். புதன் உங்கள் ராசி அதிபதி என்பதால் படிப்பில் படுசுட்டியாக இருப்பீர்கள். ஐ.டி, கம்ப்யூட்டர், கணக்கு, எழுத்து துறை மாணவர்களுக்கு பெரிய வெற்றி கிடைக்கும். வெளிநாட்டில் படிக்க விண்ணப்பித்தவர்களுக்கு 05.10.2026 திங்கள் அன்று நல்ல செய்தி வரும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை | எண்: 5 | நாள்: புதன்




**கடகம்:** கடகராசி அன்பர்களே! எதிலும் பொறுமையாக இருக்கவேண்டிய வாரம். பணவரவைப் பொறுத்தவரை திருப்திகரமான போக்கே காணப்படுகிறது. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகை செலவுகளை ஏற்படுத்துவதுடன் மகிழ்ச்சியும் தருவதாக இருக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். சக ஊழியர்கள் தங்கள் பணிகள் தொடர்பாக உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். புதிய முதலீடுக்கான பண உதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும். அலுவலகம் செல்பவர்களுக்கு திருப்தி தரும் வாரம். சலுகைகள் கிடைக்கும் வாடகை வீட்டில் இருந்து சொந்த வீட்டிற்கு செல்லும் யோகம் உண்டு. தாய் வழி சொத்து கிடைக்கும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். வீடு பழுதுபார்க்கும் செலவுகள் வரும். பெண் பார்க்கும் படலம், நிச்சயதார்த்தம் போன்றவற்றை 02.10.2026 வெள்ளி மற்றும் 06.10.2026 செவ்வாய் அன்று வைக்கலாம். கடல் சார்ந்த படிப்பு படிப்பவர்களுக்கு சிறப்பான வாரம். வெளிநாட்டு கல்வி முயற்சி வெற்றி பெறும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை | எண்: 2 | நாள்: திங்கள், வெள்ளி




**சிம்மம்:** சிம்மராசி அன்பர்களே! வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் செலவுகள் இருக்காது. பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தந்தைவழி உறவினர்களால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சிகள் தொடங்குவதற்கு உகந்த வாரம். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். வேறு வேலைக்கு முயற்சி செய்வதைத் தவிர்க்கவும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். அதிகாரிகள் அவ்வப்போது கண்டிப்பு காட்டுவார்கள். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்றவோ அல்லது விரிவுபடுத்தவோ நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது லேசான சோர்வு ஏற்படும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. பூர்வீக சொத்தில் இருந்த தடைகள் விலகும். புதிய வீடு கட்டும் பணி தொடங்க 04.10.2026 ஞாயிறு சிறந்த நாள். வீட்டில் பெரியவர்களின் ஆசியால் சுப காரியம் நடக்கும். வாடகை வீட்டில் இருப்பவர்கள் சொந்த வீட்டிற்கு மாறும் யோகம் உண்டு. வீட்டிற்கு புதிய விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மாணவர்களுக்கு இது ராஜயோக வாரம். அரசு தேர்வுகள், IAS, IPS போன்ற போட்டித் தேர்வுகளுக்கு தயாராகுபவர்களுக்கு வெற்றி உறுதி. படிப்பில் முதலிடம் பிடிப்பீர்கள். நிர்வாகம், அரசியல், தலைமைத்துவம் சம்பந்தமான படிப்புகளில் சிறந்து விளங்குவீர்கள்.

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, சிவப்பு | எண்: 1 | நாள்: ஞாயிறு




**கன்னி:** கன்னிராசி அன்பர்களே! பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பழைய கடன்களைத் தந்து முடிப்பீர்கள். கொடுத்த கடனும் திரும்பக் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒரு சிலருக்கு பதவிஉயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்கும் சாத்தியமுண்டு. இதுவரை கண்டிப்பாக இருந்த அதிகாரி கனிவுடன் நடந்துகொள்வார். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்யவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். சொத்து பிரச்சனையில் சட்ட ரீதியாக வெற்றி கிடைக்கும். வீட்டில் இருந்த பழுதுகளை சரி செய்வீர்கள். வீட்டிற்கு புதிய மின் சாதனங்கள் வாங்குவீர்கள். வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு சொந்த வீடு கனவு நனவாகும் நேரம். திருமண முயற்சிகளில் தெளிவான முடிவு எடுப்பீர்கள். ஜாதக பொருத்தம் நன்றாக அமையும். கன்னி ராசி பெண்களுக்கு படித்த, வேலையில் இருக்கும் வரன் அமையும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை | எண்: 5 | நாள்: புதன்




**துலாம்:** துலாராசி அன்பர்களே! பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி அன்னியோன்யம் ஏற்படும். எதிர்பாராத பயணங்களும் அதனால் உடல் அசதியும் சோர்வும் உண்டாகும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்ட நண்பர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அவர்களால் ஆதாயமும் உண்டாகும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். அவருடன் சுமுகமான உறவு ஏற்படும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். ஒரு சிலருக்கு அவர்கள் விரும்பியபடி இட மாறுதல் கிடைக்கும். சலுகைகளும் கிடைக்கக்கூடும். வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவார்கள். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும். என்றாலும் உற்சாகத்துடன் சமாளித்துவிடுவீர்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சில சலுகைகள் கிடைக்கும் இந்த வாரம் வீடு சம்பந்தமான விஷயங்களில் சுக்கிர யோகம் அடிக்கிறது. வீட்டை அழகுபடுத்துவீர்கள். புதிய வீடு வாங்கும் முயற்சி 02.10.2026 வெள்ளிக்கிழமை அன்று வெற்றி பெறும். வீட்டில் ஆடம்பர பொருட்கள் சேரும். வாடகை வீட்டில் இருப்பவர்கள் நல்ல வசதியான வீட்டிற்கு மாறுவீர்கள். கூட்டு சொத்து பிரச்சனை சமரசமாக முடியும். மாணவர்களுக்கு கலை, சினிமா, ஃபேஷன், சட்டம் படிப்பவர்களுக்கு இது சிறந்த வாரம். படிப்பில் புதிய ஐடியாக்கள் தோன்றும். குருப் ஸ்டடி மூலம் நல்ல மதிப்பெண் பெறுவீர்கள். வெளிநாட்டில் படிக்கும் வாய்ப்பு தேடி வரும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, வெளிர் நீலம் | எண்: 6 | நாள்: வெள்ளி

(தொடர்ச்சி 22 பக்கம்)

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 25ஆவது வருடமாக நடத்தும்**

**திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு**

**நடைபெறும் திருமுறை விழா**

**சிறார்களுக்கான போட்டிகள்**



## போட்டிகள் நடைபெறும் இடம்:
## ஆத்மஜோதி இல்லம்

**1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

**திருமுறை மனனப் போட்டி**

நவம்பர் 28, 2026 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

பேச்சுப் போட்டி

நவம்பர் 28, 2026 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

# திருமுறைவிழா 2025

## இடம்: ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8

காலம்: டிசம்பர் 05 சனிக்கிழமை (05-12-2026) மாலை 3:00 மணி - இரவு 9:00 மணி வரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

| | |
|---|---|
| பாலர்பிரிவு: | 30-11-2020 ஆம் திகதியும் அதன் பின் பிறந்தவர்களும் |
| கீழ்ப்பிரிவு: | 30-11-2020 - 30-11-2016 க்கும் இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 30-11-2016 - 30-11-2012 க்கும் இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 30-11-2012 - 30-11-2008 க்கும் இடைப்பட்டவர்கள் |

**பேச்சுப் போட்டி விடயங்களை**

**விண்ணப்படிவத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

திருமுறைப் மனனப் போட்டிக்கு தேவையான பாடல்கள் யாவற்றையும் இந்து சமயப் பேரவை வெளியீடான பயன்தரவல்ல திருமுறைப்பாக்கள் என்ற நூலில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி நவெம்பர் 25, 2026**

விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும்
பேச்சுப் போட்டிக்குரிய விடயமும் கிடைக்கும் இடம்

முருகன் புத்தகசாலை,
GTA MALL 5215 Finch Ave. E. 416-321-0285
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**சிவ முத்துலிங்கம் 416-724-6240**
**ஜனா தயாபரன்:416-560-1812**

**ஒன்ராறியோ**

**இந்து சமயப் பேரவை, கனடா**

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** விருச்சிகராசி அன்பர்களே! பொருளாதார நிலைமை திருப்தி தருவதாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள வேண்டி வரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதுவரை ஏற்பட்டு வந்த மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர்கள் அதற்கான முயற்சிகளில் இப்போது ஈடுபடலாம். நல்ல வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். சக வியாபாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. வேலைக்குச்செல்லும் பெண்கள் அலுவலகத்தில் கூடுதல் நேரம் வேலை செய்யவேண்டி இருக்கும். இந்த வாரம் சொத்து விஷயத்தில் அதிரடி வெற்றி உண்டு. நீண்ட நாட்களாக இழுபறியில் இருந்த வீடு, நில பிரச்சனை உங்களுக்கு சாதகமாக முடியும். பூமிக்கு அடியில் இருந்து கிடைக்கும் யோகம் போல, திடீர் சொத்து சேரும். வீட்டில் பழைய பொருட்களை மாற்றி புதுப்பிப்பீர்கள். திருமணத்தில் சற்று தாமதம் ஏற்படலாம், ஆனால் நல்ல வரனாக அமையும். காதல் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கவும், ரகசியங்கள் வெளியாக வாய்ப்பு உண்டு.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, கருஞ்சிவப்பு | எண்: 9 | நாள்: செவ்வாய்




**தனுசு:** தனுசுராசி அன்பர்களே! வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. மற்றவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். பதவி உயர்வையோ ஊதிய உயர்வையோ தற்போது எதிர்பார்க்கமுடியாது. வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்னை இல்லாத வாரம். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் ஓரளவு நிறைவேறும் வெளியூரில், வெளிநாட்டில் சொத்து வாங்கும் யோகம் உண்டு. தந்தை வழி சொத்து கிடைக்கும். வீட்டை பெரிதுபடுத்தி கட்டுவீர்கள். 02.10.2026 வெள்ளி மற்றும் 06.10.2026 செவ்வாய் திருமண பேச்சுக்கு உகந்த நாள். திருமணமானவர்களுக்கு குழந்தை பாக்கியம் பற்றிய நல்ல செய்தி வரும். காதல் திருமணம் பெரியோர்கள் ஆசியுடன் நடக்கும். குருவின் ஆசியால் படிப்பில் முதலிடம் பெறுவீர்கள். போட்டித் தேர்வுகளில் எளிதாக வெற்றி பெறுவீர்கள்.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள் | நாள்: வியாழன்




**மகரம்:** மகரராசி அன்பர்களே! பணவரவுக்கு குறைவிருக்காது. ஆனாலும், எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளால் கையிருப்பு குறைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சற்று பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். கூடுமானவரை அவர்களைக் கண்டிக்காமல் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் உங்களின் ஆலோசனைகள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும். அதன் காரணமாக சில சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சக ஊழியர்களால் ஏற்பட்ட மறைமுகத் தொல்லைகள் நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சற்று பொறுப்புகள் கூடுவதால் சோர்வு உண்டாகும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை திருப்தி தருவதாக இருக்கும். மாணவர்களுக்கு கடின படிப்பு வெற்றி தரும். பொறியியல், சட்டம், நிர்வாகம் படிப்பவர்களுக்கு சிறப்பு. மூட்டு வலி, கால் வலி உள்ளவர்கள் கவனமாக இருக்கவும். பழைய வீடு, நிலம் சம்பந்தமான விஷயங்கள் நன்மையாக முடியும். புதிய வீடு கட்டுவதை விட, இருக்கும் வீட்டை சீரமைப்பது, வலுப்படுத்துவது நல்லது. இரும்பு, கட்டுமானம் சம்பந்தமான தொழிலில் இருந்து சொத்து சேரும். அரசாங்கம் மூலம் வீட்டு மானியம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

அதிர்ஷ்ட நிறம்: கருநீலம் | நாள்: சனி




**கும்பம்:** கும்பராசி அன்பர்களே! பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் குறைவு என்பதால் சிறிது சேமிக்கவும் முடியும். பிள்ளைகள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான வெளியூர்ப் பயணம் சாதகமாக முடியும். நீண்டநாள்களாக செலுத்த முடியாமல் இருந்த குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். ஒரு சிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே ஏற்படும். சிலருக்கு எதிர்பார்த்த சலுகையும் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்கு தாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். விற்பனையைப் பெருக்குவதில் பணியாளர்கள் உற்சாகமாக ஈடுபடுவார்கள். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். அலுவலகத்தில் சக ஊழியர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும் விஞ்ஞானம், கணினி, AI, விண்வெளி ஆராய்ச்சி படிப்பவர்களுக்கு பெரிய வெற்றி காத்திருக்கிறது. குழுவாக படிப்பது நல்ல பலன் தரும். போட்டித் தேர்வுகளில் உங்கள் வித்தியாசமான சிந்தனை முதலிடம் பெற வைக்கும். இந்த வாரம் வித்தியாசமான யோகம். புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய வீடு, அப்பார்ட்மெண்ட் வாங்கும் யோகம் உண்டு. நண்பர்கள் மூலம் சொத்து விஷயத்தில் உதவி கிடைக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: நீலம் | நாள்: சனி




**மீனம்:** மீனராசி அன்பர்களே! எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் புகழ் பெற்ற புனிதத்தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். பணியின் காரணமாகப் பயணம் மேற்கொள்ள நேரிடும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக கூடுதலாக உழைக்கவேண்டி வரும். வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான கடன் கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சலுகைகளும் கிடைக்கும் காதலிப்பவர்களுக்கு பெற்றோர் சம்மதம் கிடைக்கும். திருமணமானவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி, குழந்தை பாக்கிய யோகம் உண்டு. குரு பலத்தால் வீடு யோகம் அமோகம். கடல், ஆறு அருகில் வீடு வாங்கும் ஆசை நிறைவேறும். காதலிப்பவர்களுக்கு பெற்றோர் சம்மதம் கிடைக்கும். திருமணமானவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி, குழந்தை பாக்கிய யோகம் உண்டு.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், வெள்ளை | நாள்: வியாழன்

## அஹிம்சை வழியில் போராடி தன் உயிரைத் துறந்த தியாகி தீலீபனை இலங்கை இந்திய அரசுகள் தொடர்ந்தும் புறக்கணிப்பது கண்டனத்திற்குரியது!

### யாழ்ப்பாணத்தில் திலிபன் சிலை அகற்றப்பட்ட விவகாரத்தைக் கண்டித்து ஒன்றாரியோ மாகாண உறுப்பினர் லோகன் கணபதி விடுத்துள்ள அறிக்கை!



1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆயுதங்களை ஒப்படைத்தது. ஆனால், ஈழத் தமிழரின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்து அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படாததால், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த இருந்த திலீபன் என்னும் இராசையா பார்த்தீபன்) அவற்றை தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக அஹிமசை வழியில் போராடத் தீர்மானித்தார்.

1987ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் திகதி அன்று, இந்திய அரசுக்கு திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை ஜனநாயக முறையில் முன்வைத்தார் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் அமைக்கப்பெற்ற ஒரு பந்தலில் நீராகாரம் கூட அருந்தாது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்கதத் தொடங்கினார். பின்னர் இந்திய அரசோ அன்றி தமிழ்நாட்டு அரசோ திலிபனின் கோரிக்கைகளையோ அன்றி அவரது தியாக வேள்வியின் உன்னத்தையோ அறியாமல் அவற்றைப் புறக்கணித்து செயற்பட்டன. எனவே இறுதியில் அஹிம்சை வழியில் போராடி தன் உயிரைத் துறந்த தியாகி தீலீபன் தனது தலைவனான பிரபாகரன் அவர்களின் வேண்டுகோளைக் கூட நிராகரித்து தன் உயிரை எமது மக்களுக்காகவும் தமிழ்த் தேசத்திற்காகவும் அர்ப்பணித்தார். எனினும் இந்த தியாகத்தைக்கூட புரிந்து கொள்ளாமல் இலங்கை இந்திய அரசுகள் தொடர்ந்தும் புறக்கணிப்பது கண்டனத்திற்குரியது!

இவ்வாறு டயாழ்ப்பாணத்தில் திலிபன் சிலை அகற்றப்பட்ட விவகாரத்தைக் கண்டித்து ஒன்றாரியோ மாகாண உறுப்பினர் லோகன் கணபதி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் காணப்பெறும் இரு பக்க அறிகையை வாசகர்கள் வாசித்து அறிந்து கொள்ளும் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளது


LOGAN KANAPATHI

Constituency office

Legislative office

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US



# NESAN
# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய $30.00 மட்டுமே!
416-752-1524




29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்




உதயம் 1591 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 2, 2026

# றொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா 2026 அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து சிறப்பித்த தமிழ்த் திரை இசையமைப்பாளர் மற்றும் இயக்குனர் மிஸ்கின்



7வது ஆண்டில் காலடி எடுத்துவைத்த றொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் 2026ம் ஆண்டிற்குரிய அங்குரார்ப்பண வைபவம் கடந்த 22-09-2026 அன்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. றொறன்ரோ சர்வதேச தமிழ் திரைப்பட விழாவின் நிறுவனர் செந்தூரன் நடராஜா மற்றும் இயக்குனர் கிருத்திகா ஆகியோரின் மேற்பார்வையில் பல நண்பர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களின் ஆதரவோடு கடந்த வருடங்களைப் போல இவ்வருடமும் கோலாகலமாக நடைபெற்றது என்றால் அது மிகையாகாது. (தொடர்ச்சி 14ம் பக்கம்)

## Awards Ceremony & Launching of their Own Cricket Field hosted by Tamil Canadian Cricket Association was a Proud Occasion!

# "தமிழ்க் கனடிய கிரிக்கெட் கழகம்" நடத்திய வருடாந்த விருது விழாவும் புதிய கிரிக்கெட் மைதான திறப்பு விழாவும்!










கனடாவில் நீண்ட கால கிரிக்கெட் வரலாற்றையும் வெற்றிகளையும் கொண்ட "தமிழ்க் கனடிய கிரிக்கெட் கழகம்" நடத்திய 2026ம் ஆண்டிற்குரிய வருடாந்த விருது விழாவும் அவர்களது புதிய கிரிக்கெட் மைதான திறப்பு விழாவும் கடந்த 26ம் திகதி சனிக்கிழமையன்று மாலை நடைபெற்றது.
3280 **Westney Road North, Pickering** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள விசாலமான மைதானத்தில் நடைபெற்ற இந்த அற்புதமான வைபவத்தில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள் ஏனைய கிரிக்கெட் கழகங்களின் உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட அந்த மைதானம் அழகிய முறையிலழ் அலங்கரிக்கப்பெற்று பார்ப்பவர்கள் உற்சாகமடையும் ஒரு தமிழர் விழாவாக நடைபெற்றது என்றால் அது மிகையாகாது. (தொடர்ச்சி 7ம் பக்கம்)

# அஹிம்சை வழியில் போராடி தன் உயிரைத் துறந்த தியாகி தீலீபனை இலங்கை இந்திய அரசுகள் தொடர்ந்தும் புறக்கணிப்பது கண்டனத்திற்குரியது!



### யாழ்ப்பாணத்தில் திலீபன் சிலை அகற்றப்பட்ட விவகாரத்தைக் கண்டித்து ஒன்றாரியோ மாகாண உறுப்பினர் லோகன் கணபதி விடுத்துள்ள அறிக்கை!

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆயுதங்களை ஒப்படைத்தது. ஆனால், ஈழத் தமிழரின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்து அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படாததால், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த இருந்த திலீபன் என்னும் இராசையா பார்த்தீபன்) அவற்றை தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக அஹிமசை வழியில் போராடத் தீர்மானித்தார். (தொடர்ச்சி 22ம் பக்கம்)



# யாழ்ப்பாணத்தில் அகற்றப்பட்ட திலீபனின் சிலை!

### யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்!

நினைவுகளை,நினைவுச் சின்னங்களை,சிலைகளை அழிப்பது ஓர் அரசியல். அது ஒடுக்கும் அரசியல்.இனஅழிப்பு அரசியல்.அதற்கு எதிராக நினைவுகளைப் புதுப்பிப்பதுநினைவுகளை மறந்துவிடாமல் இருப்பது நினைவுகளை மையமாக வைத்துத் தேசத்தைத் திரட்டுவது என்பது இன ஒடுக்குமுறைக்கு எதிரான ஓர் அரசியல்.இன அழிப்புக்கு எதிரான ஓர் அரசியல்.இலங்கைத் தீவின் பல தசாப்த கால அரசியல் எனப்படுவது இந்த இரண்டு முரணான போக்குகளால் கட்டமைக்கப்பட்டதுதான். இந்த வரலாற்று அனுபவத்தின் பின்னணிகள் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை திலீபனின் சிலை அகற்றப்பட்டது தொடர்பான விடயத்தைப் பார்க்கலாம்.திலீபனின் சிலை ஒரு விவகாரமாகியது இதுதான் முதல் தடவை அல்ல. இதற்கு முன்னரும் அந்த நினைவுத் தூபி சிதைக்கப்பட்டிருக்கிறது. இம்முறை ஒரு மார்பளவு சிலை வைக்கப்பட்டது. (தொடர்ச்சி 8ம் பக்கம்)